

இதழ் -21
16.03.2021
பல்சுவை மின்னிதழ்
சத்தமில்லா ச(காப்)தம்
தாஜ்மஹாலின் பேர்த்தி
தனிப்பெரும் துணையே
பெருவெள்ளத்திற்கான பயணம்



# கஞ்சனாக இருங்கள்!!!




நான் வைத்த பலா கன்றோ, மா மரமோ எனக்கு கனி தரப்போவதில்லை என்று தெரிந்தும் எம்முன்னோர்கள் பயன்தரும் மரங்களை நட்டு வளர்த்து விட்டுச் சென்றுள்ளார்கள். நாங்கள் என்ன செய்கின்றோம்? அடுத்த தலைமுறைக்கு எவற்றை விட்டுச்செல்லப்போகிறோம்? அவற்றுள் முக்கியமான ஒன்று போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர்!

போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் என்றால் என்ன? 15 வருடங்களுக்கு முதல் கேள்விப்படாத பெயர். 10 வருடங்களுக்கு முன் ஆடம்பரச்செலவு. இன்று அத்தியாவசியச்செலவு.

கிணறுகள் வற்றுகிறதென்று மேலும் ஊற்றுக்களை ஆழமாக்குகிறோம். கிணறுகள் வற்றுவது நிலத்தடி நீர் குறைந்து கொண்டு போவதன் குணங்குறி என்று சொல்லிக்கொடுங்கள். அடி மட்டும் உறிஞ்சி எடுத்துவிட்டால் அடுத்த தலைமுறை என்ன செய்யும் என்று யோசியுங்கள். மண்ணால், கற்களால் இயற்கையாகவே வடிக்கப்பட்டு நிலத்தடியில் கிடந்த தண்ணீர் சுத்தத்திலும் சுத்தம். அதை வீண்விரயமாக்கி விட்டு இன்று குடிநீரை காசு கொடுத்து வாங்கத்தொடங்கிவிட்டோம்.

கடலில் இருந்து வானம் வாரி எடுத்து மண் நிறைய மழையாய் தந்ததை மண்ணுக்குள் அனுப்பாமல் கடலுக்குள் அனுப்பி விட்டு, கனரக இயந்திரங்கள் மூலம் கடல் நீரை சுத்திகரிக்கப்போகிறோம். மழை நீரை வீடுகள் தோறும், வீதிகள் தோறும் சேமித்திருந்தால் பயிர்களுக்கும், பிற தேவைகளுக்கும் போதுமென்றளவுக்கு பயன்படுத்தியிருக்கலாமே? ஒரு துளி மழைநீரையும் கடலோடு கலக்கவிடாத பராக்கிரம பாகு மன்னனின் வரலாற்றை சிறு வயதிலேயே சொல்லிக்கொடுப்பது மன்னனைப்பற்றி அறிய மட்டுமல்ல, முக்கியமாக மழை நீரின் மகத்துவத்தை அறிய வைப்பதற்கே என்பதை உணரத்தொடங்குங்கள். பூமிப்பந்தில் நீரின் அளவு கூட பனிக்கட்டி உருகுவது மட்டும் காரணமல்ல. நிலத்திற்குள் இருந்த நீர் நிலத்திற்கு மேல் வந்துவிட்டது. கழிவு நீராக, கடல்நீராக அது கலந்து விட்டது.

குறித்து வைத்துக்கொள்ளுங்கள். இன்னும் 10 வருடங்களில் போத்தல்களில் அடைக்கப்பட்ட காற்றும் விற்பனைக்கு வரலாம். கவனமாக இருங்கள். இலவசமாக இலகுவாக இயற்கையாக கிடைத்தவற்றை எல்லாம் இழந்து கொண்டிருக்கிறோம். 20 வருடங்களுக்கு முதல் தண்ணீர்ப்போத்தலும் பால் போத்தலும் ஒரே விலைக்கு விற்கும் என்று சொல்லியிருந்தால் பைத்தியக்காரனாக பார்த்திருப்பார்கள். இன்று அதே விலைக்கு வாங்கிக்கொண்டு இருக்கிறோம்.

குடிநீரின் அருமை பெருமைகளை பேசுவதற்காகவும், எழுதுவதற்காகவும் தானா இந்த குடிநீர்தினம் மார்ச் 22 சர்வதேச அளவில் கொண்டாடப்படுகிறது? திண்டாட்டத்தில் உள்ள குடிநீரின் மகத்துவத்தை அனைவரும் உணர்ந்து, காலம் உள்ள வரை கடைசித்தலைமுறைக்கும் அதை கிடைக்கச்செய்ய உறுதி கொள்ள வேண்டும்.

**ஆக, தண்ணீர் விசயத்தில் வடிகட்டிய கஞ்சனாக இருங்கள்! தப்பேயில்லை!**



இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

வடிவமைப்பாளர்கள்
வ.குணநீதன்

ஆசிரியர்
ச.சந்தோஷன்

திறனாய்வாளர்
ந. லவலோஜன்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இவ்விதழில் துமித்துளை...

04 இயற்கை மனிதனுக்காக மட்டுந்தானா?
06 கம்பனில் அறம்
09 திரைத்தமிழ் - காப்பான்
11 சத்தமில்லா சகாப்தம்
14 இறையாண்மை
16 தாஜ்மஹாலின் பேர்த்தி
19 தனிப்பெரும் துணையே
23 பார்வைகள் பலவிதம்
24 சித்திராங்கதா
27 வேர் சிகிச்சை
29 ஈழச் சூழலியல்
32 சிங்ககிரித்தலைவன்
34 ஈர நிலங்களின் மீது ஈரம் வேண்டும்.
37 குறுக்கெழுத்துப் போட்டி
38 வழுக்கியாறு
40 பெண்களும் உளவியல் முரண்பாடுகளும்
43 கிரிக்கெட்டில் யார் வேண்டுமானாலும் இந்தியாவுடன் போட்டியிடலாமா?

# இயற்கை மனிதனுக்காக மட்டுந்தானா?

ஒவ்வொரு படைப்புக்கும் ஒவ்வோர் அழகை இயற்கை தருகிறது. விட்டிலுக்கு கனலின் மேல் காதலைத் தந்தது. மின்மினிக்கு வெளிச்சம் தந்தது. ஊமைப்பறவைகளின் உதடு வழியே இனிய இசையைத் தந்தது. மலர்களிற்கு நாவையும் தந்து மௌனத்தையும் கற்றுக் கொடுத்தது. இளமைப் பழங்களிற்கு இன்சுவையைத் தந்து பின் அழுகி உதிரவும் செய்தது. எதற்காக இவையெல்லாம்?

## அட்டைப்படம் சொல்லும் கதை

புகைப்படப்பிடிப்பாளர்:- பேபியோ பிஸ்ஸிஓத்றா

Photographer:- Fabio Pissiotta

புகைப்படம் எடுக்கப்பட்ட இடம் :- இத்தாலி

Location:- Italy

பாதையோரம் ஒரு திராட்சைத் தோட்டம். ஊதாரித்தனமாய் காய்த்துக் குலுங்கின திராட்சைகள். வாடிக்கையாளர் எவருமின்றிப் போக நாளடைவில் மெல்லக் காயத்தொடங்கின பழங்கள்.



பாதை வழியே ஒரு வியாபாரி வந்தான். அவன் பார்வையில் காய்ந்த பழங்களெல்லாம் கருகிய பணங்களாக தெரிந்தன. மனதுக்குள் கணக்குப்போட்டுக்கொண்டே தோட்டக்காரனைத் திட்டித் தீர்த்தான்.

காதலர்கள் வந்தார்கள்.
காதலியின் உதடுகளில் வைக்க ஒரு கனிந்த திராட்சையைத் தேடினான் காதலன். கிடைக்கவில்லை.
"உன் உதடுகளின் சுவையினை ருசிக்கும் வாய்ப்பை இழந்தன இந்தப் பழங்கள்" என்றான்.அவள் சிரித்தாள்.

ஒரு விஞ்ஞானி வந்தான்.
காய்ந்த திராட்சைகளைப் பறித்தான். ஆய்வுகூடத்திற்குப் போனான். தோலினை பிய்த்தான். கசக்கினான். ஆராய ஆரம்பித்தான்.

ஒரு கவிஞன் வந்தான்.
காய்ந்த பழங்களின் மொழியை நாசியினால் கேட்டான். குளிர்மையை கன்னத்தில் வைத்துப் பார்த்தான். ஆகா..! எழுத ஆரம்பித்தான்.

"திராட்சை என்கிற திரவியமே
நீங்கள்
இயற்கையின் மென்கற்கள்
நற்சுவை நட்சத்திரங்கள்
செந்நிலவின் முப்பரிமாண துளிகள்

திராட்சைப் பூக்கள் ஒரு சாதி
வண்டுகள் ஒரு சாதி
எனவே
நீங்கள் கலப்புத்திருமணத்தில்
உருவான குழந்தைகள்
ஆதலாலோ தீண்டாமையாலே
வாடிவிட்டீர்கள்"

எழுதி முடிந்ததும் இலக்கமிட்டு பைக்குள் இட்டான்.

ஒரு விதவை வந்தாள்.
வாடிய திராட்சைகளை மெதுவாய்த் தொட்டாள்.
பெருமூச்செறிந்தாள்.
“என்னை விட உங்களைத்தான் அதிகம் நேசித்தார் என் கணவர்.
உங்களைத் தேடியாவது வந்தாரா அவர்?”
என்றாள்.
கண்ணீர் சொரிந்து காய்ந்த கனிகளை ஈரமாக்கினாள்.

ஒரு பைத்தியக்காரன் வந்தான்.
ஒரு பழத்தின் அருகே வாய் வைத்து
“கலோ கிழவி” என்றான்.
பிறகு பழத்தில் காதை வைத்துக் கேட்டான்.
அவன் முகம் மலர்ந்தது.

உடலுக்கு நோகாமல் நடந்தபடியே ஒரு சோம்பேறி வந்தான்.
“ஐயோ திராட்சை... அநியாயமாய்ப் போய் விட்டதே, பரவாயில்லை. பழமாயிருந்தாலும் புளித்துத் தானிருக்கும்”
நோகாத நடையைத் தொடர்ந்தான்.

ஒரு நாட்டு வைத்தியர் வந்தார்.
“இதன் மருத்துவ குணங்கள் அறிவோரோ யாராயினும்”
என்று கிடைத்தவரை பறித்து பையிலிட்டுக்கொண்டார்.

ஒரு இணையத்தள நிருபர் வந்தார்.
“இந்த வரண்ட பழங்களைப் பற்றி
சுவாரஸ்யமாய்ச் சொல்வதற்கு ஏதாவது இருக்கிறதா?”
என்று தோட்டக் காரனிடம் கேட்டார். தோட்டக் காரன் தலையைச் சொரிந்தான். எடுத்த காணொளியையும் அழித்து விட்டு நிருபர் சென்றுவிட்டார்.

ஆசிரியர் ஒருவர் வந்தார்.
ஒரு பழத்தின் மீது நூற்றுக்கு நூற்றிநாற்பது என்றும் மற்றொரு பழத்தின் மீது நூற்றுக்குப் பதினைந்து என்றும் மதிப்பெண் இட்டுச் சென்றார்.

ஒவ்வொன்றையும் கண்ணால் எடைபோட்ட படி ஒருவர் வந்தார்.
காய்ந்த பழங்களைப் பார்த்துப் பதறினார்.
“வீண்வீண் நிலம் வீண். இவற்றை நட்டதால் என்ன உபயோகம். இந்தத் தோட்டத்தை அழித்து நெல்லாவது பயிரிட ஏற்பாடு செய்ய வேண்டும்” என்று ஆவேசத்தோடு நடந்தார்.

ஒரு அறிவுஜீவி வந்தார்.
பழங்களை அலட்சியமாய்ப் பார்த்தார். முகம் சுழித்தார். கையிலிருந்த சிகரெட்டால் ஒரு உதிர்ந்த திராட்சையை தட்டினார். அதி கீழே விழுவதைப் பார்த்து அவ்வளவு திருப்தியோடு சென்றார்.

ஒரு குருவும் சீடனும் வந்தனர்.
சீடன் பழங்களைப் பார்த்து
“அடடே! இப்படி ஆகி விட்டதே” என்று வருந்தினான்.

“இதன் இளமைச்சுவை என்பது அறிவுமயக்கம். அநித்தியம். எல்லாம் இதுபோல் வாடி உதிர்ந்துவிடும். அழகு மோசடித் திருடன். உன்னை ஏமாற்றிக் கொள்ளையடித்து விடுவான். மாயையில் இருந்து தெளிவுபெறு” என்று குரு உபதேசம் செய்தார்.

ஒருவன் அவசர அவசரமாக வேலைக்குப் போய்க்கொண்டிருந்தான். காய்ந்த பழங்கள் அவன் பார்வையில் படவில்லை.

ஒரு புகைப்படக் கலைஞன் வந்தான். முந்நூற்றருபது கோணத்திலும் முயன்று முயன்று பார்த்தான். எதுவோ ஒன்று குறைந்தது.

அந்நேரம் எங்கிருந்தோ ஒரு தும்பி பறந்து வந்தது. சிறகுகளால் பாடிக்கொண்டு அந்த வரண்ட குலையை வட்டமிட்டது. பிறகு பழம் உதிர்ந்து விடாதவாறு மிகமென்மையாய் அதன் மேல் ஏறி அமர்ந்தது. திராட்சை சிரித்தது.

உலர்த்த திராட்சை உயிர் கொண்டிருப்பதற்காய் திருப்தியுற்றது. புகைப்படக் கலைஞனுக்கு விடுபட்ட ஏதோ ஒன்று கிடைத்து விட்டது. புகைப்படம் அழகானது. நம் இதழின் அட்டையில் இம்முறை அச்சாகிறது.

ஆமாம். இப்போது சொல்லுங்கள். இயற்கை யாருக்காக? மனிதனுக்காக மட்டுந்தானா?

ஓஓ.. ஒரு சின்னஞ்சிறிய தும்பிப்பூச்சி எவ்வளவு பெரிய உண்மையை எமக்குக் காட்டிவிட்டு பறந்து செல்கிறது.



# கம்பனில் அறம்

*வி. சாரங்கன்*

தமிழ் காப்பிய உலகில் உச்ச படைப்பு கம்பராமாயணம். சோழர் காலம் படை வலிமையாலும் செல்வ வலிமையாலும் செழிப்புற்று விளங்கியது. வளமான பொருளாதாரத்தால் கலைகளும் புலவர்களும் ஆதரிக்கப்பட்டனர்.



சோழர் காலத்தில் கம்பன் எனும் தெய்வப்புலவர் கம்ப ராமாயணத்தை இயற்றினார் வால்மீகியின் ராமாயணத்தை கேட்டு இன்புற்று இருந்தவர்க்கு தமிழ் மரபிற்கு ராமனைக் கொணர்ந்து அச்சூழல் மரபிற்கு ஏற்ப கட்டமைத்து புரட்சி செய்தவன் கம்பன்.

ஆறு காண்டங்கள் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களால் காப்பியத்தின் வழி வாழ்வியலின் ஏதோ ஒரு செய்தியை சொல்லவருகிறது கம்பன் தேவ பாஷையில் பாடப்பட்ட ராமாயணத்தை பாட முற்பட்டபோது அதை வெறுமனவே இலக்கியமாக காட்டாது வாழ்வியலாக காட்ட முற்பட்டுள்ளார். கம்பராமாயணத்தில் ஒவ்வொரு பாத்திரங்களும் ஏதோ ஒரு செய்தியைச் சொல்ல வருகிறது.

“ காசில் கொற்றத்து ராமன் கதையை.......”

சொல்ல வருவதாக பிரகடனம் செய்து கொண்ட கம்பன் பாத்திரங்கள் வாயிலாக அறத்தை போதிக்க தொடங்குகிறார்

தமிழ் இலக்கியப் பரப்பில் இன்றுவரை அறம் போதிப்பதில் உச்சம் தொட்ட நூல் திருவள்ளுவரின் திருக்குறள். கம்பன் தன் கருத்துகளை எடுத்துக்கூற வள்ளுவரை பல இடங்களில் துணைக்கு அழைக்கிறார். சமூக அறம் , அரசியல் அறம், தனிமனித அறம் அத்தனை அறங்களும் ராமாயணம் முழுதும் பாடியிருந்தாலும் தனிமனித அறத்தை கம்பன் பல இடங்களில் வலியுறுத்துவதை நாம் காணமுடிகிறது

அக்காலச் சூழலில் பெண்களுக்கு மட்டும் கற்பு ஒழுக்கம் என்பன வலியுறுத்தப்பட்டு வந்தது. கம்பனோ ராமனின் வாயிலாக பிறனில் விழையாமை என்ற அறத்தை வலியுறுத்த முற்படுகிறார்.

“வந்த எனை கைப்பற்றிய வைகல் வாய் இந்த இப்பிறவிக்கு இரு மாதரை சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம் தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய் .......”

என ராமன் அளித்த சத்தியத்தை சீதையின் வாயால் சொல்லி ஆண்களின் அறத்தை வலியுறுத்துகிறார் பெண்களை நுகர்வுப் பொருளாக பாவித்து வந்த சூழலில் வாழ்வியல் அறத்தை காப்பிய நாயகன் வாயிலாய் கம்பன் வலியுறுத்துகிறார்.

அறம் தவறிய காமம் துயரைத் தரும் என்பதை கம்பன் இரு பாத்திரங்கள் வாயிலாக வலியுறுத்தி இருப்பதை காணலாம் வாலி இராவணன் அறம் தவறிய நிலையில் வீழ்த்தப் பட்டவர்களாக கம்பன் காட்டுகிறார். வாலி தம்பியின் மனைவியை அபகரித்தமையால் கொல்லப்படுகிறான். தான் கொல்லப்பட்டமை

அறம் தவறிய நிலை என வாதிட்ட வாலி ராமனை இறுதியில் சரண் அடைகிறான் இராமனிடம் தன் தம்பியையும் மகனையும் ஒப்படைக்கும் அளவிற்கு ராமன் மீது ஈர்ப்புக் கொண்டவன் ஆகிவிடுகிறான் இங்கு தனிமனித அறத்தோடு அரசியல் அறமும் வலியுறுத்தப்படுகிறது.

வாலி வதைப் படலத்தில் இராமன் வாலியிடம் கூறுவதாக அமைந்த பாடலில்

"அருமை உம்பிதன் ஆருயிர் தேவியை பெருமை நீங்கினை எய்தப்பெறுதியோ....."

என பிறர் மனை நாடுதலை கண்டித்து உள்ளமையை காணலாம் வள்ளுவன் பிறனில் விழையாமை அதிகாரத்தில் இதே விடயத்தை வலியுறுத்தி உள்ளமையை காணலாம்.

"பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறனொன்றோ ஆன்ற வொழுக்கு" என்கிறார்.

பிறர்மனை விரும்பியதால் வீழ்ந்ததாக ராவணன் காட்டப்படுகிறார் ராவணன் அறம் மீறல் மாரீசன், இந்திரஜித் மண்டோதரி,



இலங்கினி கும்பகர்ணன் ஆகிய பாத்திரங்கள் வாயிலாக பேச வைக்கிறார்.



"சிட்டர் செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்..." என கும்பகர்ணன் கூற்றாய் பிறனில் விழைதல் குலச்சிறுமை என அறம் வலியுறுத்த பட்டிருப்பதைக் காணலாம்.

ஒரு பெண் பற்றிய ஆணின் பார்வை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை குகன் எனும் பாத்திரம் மூலம் காட்டி விடுகிறார்.

"அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச....."

என்ற பாடலில் பரதனின் கேள்விக்கு சீதை பற்றிய வர்ணிப்பின்றி கூறி இருப்பதை காணலாம்.

கம்பராமாயணம் எழுந்த காலம் சோழர் காலம் ஓயாத போர்களால் செல்வம் நிறைந்து அதைப்போல அரண்மனைக்கு அடிமைகளும் நிறைந்தனர். போரில் தோற்ற நாட்டுப் பெண்கள் அடிமைகளாக கொண்டுவரப்பட்ட மரபு அச்சூழலில் பல்வேறுபட்ட வன்முறைகளில் காணப்பட்டது. பெண்களின் மீது வன்முறை நடத்தக்கூடாது என்கின்ற அறத்தை இலக்குவன் பாத்திரம் வாயிலாக கம்பன் காட்டி விடுகிறார்.

"வில்லும் வாளும் அணி தொட மின்னிட.."

என்ற கம்பர் செய்யுளில் கிஷ்கிந்தா காண்டத்திர் அனுமனின் ஆலோசனை பேரில் தாரை அமைத்த பெண்களைக் கொண்ட காப்பரணை இலக்குவன் தாக்காது நிற்பதை காட்டுவதன் மூலம் காட்டிவிடுகிறார். இதை



வாசித்துவிட்டு தானோ இலங்கை அரசாங்கம் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டங்களின் போது பெண் போலீசாரை கடமைக்கு அனுப்பினார்களோ தெரியவில்லை.

திரிசடை ,விபீடணன் போன்ற பாத்திரங்கள் அறத்தின் வழி நின்று உயர்ந்த பாத்திரங்களாக சித்தரிக்கப்பட்டு இருப்பதை காணலாம் பெண்களுக்கான கற்பினை சீதை, மண்டோதரி ஆகிய இரு பாத்திரங்கள் வாயிலாக பேசி விடுவதைக் காணலாம்.




கற்புடைப் பெண்ணின் வல்லமையை
"எல்லை நீத்த உலகங்கள் யாவையும் சொல்லினால் சுடுவேன் தூயவன் வில்லுக்கு மாசு என்று வீசினேன் ....."
என்ற சீதையின் கூற்றின் வாயிலாய் காட்டி இருக்கிறார் வள்ளுவனும்

"தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை...."

என அறம் வலியுறுத்தி இருப்பதை காணலாம் புலால் உண்ணாமை,கள்ளுண்ணாமை வலியுறுத்தி இருப்பதை காணலாம்.

கம்பன் தன் காவியம் முழுதும் கதை போக்கோடு இணைந்து தனிமனித சமூக அரசியல் அறங்களை வலியுறுத்தி வந்ததை காணலாம் மைய நிலை அரசுக்கு எதிரான கம்பனின் கலக குரலும் ஆங்காங்கே வெளிப்பட்டு நிற்பதை கம்பராமாயணத்தில் கண்டுவிட முடியும் வள்ளுவன் எண்ணங்களை காப்பிய கதையோட்டத்தில் பாத்திர கூற்றுக்களை கம்பன் வெளிப்படுத்துவதில் தனித்துவமாய் தெரிகிறார்.



**கருத்து : நாம இந்த மண்ணுக்கு பன்னிட்டு இருக்குற கொடுமை தான் அசிங்கம்.**
**திரைப்படம் : காப்பான்**
**எழுதியவர் : பிரபாகர் , கணேசன்**

மித்ரசகி

# திரைத்தமிழ்

(பின்னணி பாடல்)

அனிதா - Hello Viewers. நான் உங்க அனிதா. & Welcome to Ashock Modern விவசாயம்.
மழை இல்லை. தண்ணி இல்லைனு டெல்டா District பூரா வறண்டு கிடக்க. இந்த இடம் மட்டும் பச்சை பசேல்னு அவ்வளவு செழிப்பா இருக்கு. இந்த Magicக்கு காரணம், Mr.கதிரவன் என்கிற Modern விவசாயி.

குப்பையிலிருந்து மண்புழுவிடம் சோளான் Energy, வீட்டன் Energy, சொட்டு நீர் பாசனம், பஞ்ச கவ்யா, மீன் அமிலம், ஜீவாமிர்தம்னு Science ஐயும் பாரம்பரியத்தையும் கலந்துகட்டி பின்னிட்டிருக்கிறார் நம்ம கதிரவன்.
Good Morning கதிரவன். நீங்க பன்னிக்கிட்டிருக்கிற Organic Farming பற்றி சொல்லுங்க?

சூர்யா - இல்லைங்க இது National Farming. Organic Farmingஐ விட இன்னும் ஒசத்தி. இயற்கையாகவே விவசாயம் பன்றது. இந்த முறைல முதல் யார் விவசாயம் பன்னிணவங்கனு பார்த்தீங்கள்னா? முசலமு ப(க)க்காக்கோ.

அனிதா – ஆ… Votca தெரியும். அது என்ன பக்காக்கோ.

சூர்யா – ஆ.. ஆ.. முசலமு ப(க)க்காக்கோ ங்க. ஜப்பான் காரர். தத்துவ விவசாயி. இந்த முறைல இயற்கை வளத்தை சுரண்டாமல் மனித வளத்தை தான் நம்பி இருக்கம். எங்க காட்டில இந்த பற்றிலைசரு, பெசிசைட்டரு மாதிரி எந்த Chemical வாசமும் பட விடுறதே இல்லை.

அனிதா – ஓ.. Super கதிர்.
(சூர்யா சோளம் பொத்தி பிடுங்குகிறார்) ஆ… Baby Cornனா எனக்கு ரொம்ப பிடிக்கும்.

சூர்யா – ரொம்ப பச்சையாவே தின்னலாம். ஒரு வாய் கடிச்சு பாருங்க.

அனிதா – (சோளத்தை கடித்த கொண்டு) ம்…. Pure Words Unbelievable. இப்ப என் நாக்கில அறுசுவையும் நடனமாடுது.
அட இது என்ன Sir. கட்டண கழிப்பிடமா?

சூர்யா – சரியா சொன்னீங்க.



அனிதா - இப்படியும் கல்லா கட்டுறீங்க போல. Side Business ஆ?

சூர்யா – அது கட்டண கக்குசு தான். ஆனா கட்டணத்த நாம தான் தாறோம். இங்க வந்து கக்கா போனா 10.00 ரூபா.

அனிதா – wow…. very very very Different Approach.

சூர்யா - இருங்க இருங்க. இதில சுயநலமும் இருக்கு.

அனிதா – சுயநலமா?

சூர்யா - இங்கிட்டு வாங்க சொல்றன்.

(கட்டண கழிப்பிடத்தில் மலம் கழிக்க வருபர்களுக்கு இடையிலான சூழல் உரையாடல்)

அனிதா – அச்சோ…. கதிரவன் நம்ம Interview First முடிப்பம்.

சூர்யா – ஆ.. வந்திட்டன் வந்திட்டன்.

அனிதா – ஆமா… அந்த ரெண்டு Toiletஉம் ஏன் மூடி இருக்கு. பாதி பேர அங்க அனுப்பி இருக்கலாம் எல்லோ?

சூர்யா – அது நிரம்பி ஆறு மாசம் ஆச்சுது எல்ல. அதுதான் பத்திரமா பூட்டு போட்டு சேமிச்சு வைச்சிருக்கிறோம்.

அனிதா – ம்… இத போாய் எதுக்கு சேமிச்சு வைச்சிருக்கிறீங்க.

சூர்யா – ஆ.. அப்படி கேளுங்க.
ஆறு மாசம் தளும்ப தளும்ப சேமிச்சு வைச்சதெல்லாம் ஊறி பக்ரீறியாவால மக்கி நல்ல உரமாகிச்சு.
இந்தாங்க. (அனிதா தள்ளி பின் செல்கிறார்.)
ஐயையோ. இதுல Smile எதுவும் வராதுங்க. இது இப்ப நைட்ரோயன்றிச்சு Pure Black Gold. கறுப்பு தங்கம்.

அனிதா – What?

சூர்யா - இத அப்படியே நீங்க நிலத்தில உரமா போட்டீங்கனு வையுங்களன், அப்படியே சொய் எரிசின், விதை விருத்தி, வேர்ப்பரம்பல்னு பயிருடைய விளைச்சல் ஆமோகமா இருக்கும். அட நீங்க தான் அப்போத சோளம் தின்னும் போது Super Tastec Nice Aroma. உங்க நாக்கில கூட அறுசுவை அப்படியே நடனமாடிச்சுனு சொன்னீங்களே.
(அனிதா வாந்தி எடுக்கிறார்.)
ஏய் இதுல வாந்தி எடுத்திடாதே.

Camera Man – அக்கா Break விட்டிடலாமா?

அனிதா - இவன் ஒருத்தன். Interview எல்லாம் வேணாம். வாட போகலாம்.

சூர்யா – ஏய் இங்க இரு நானா உன்ன வரச் சொன்னன்.

அனிதா – நீ ஏதோ Organic Farming பன்னுறாய்னு பார்த்தா. ஏதேதோ அசிங்கம் பிடிச்ச Farming எல்லாம் பன்னிட்டு ஊரை ஏமாத்திட்டு இருக்காய்.

சூர்யா – ஏய் நில்லு. ஏய் Camera on பன்னு.
விவசாயம் ஒரு தொழில் இல்லை. ஊரை காப்பாத்துற பொலிஸ் மாதிரி. நாட்டை காப்பாத்துற ஆர்மி மாதிரி. மனிசனை காப்பத்துற விவசாயமும் ஒரு Service தான்.

இந்த மண்ணுக்கு அற்புதமான குணம் இருக்குங்க. தன் மேல விழுற எந்த அசிங்கத்தையும் உபயோகமானதா மாற்றி கொடுத்திடும். நாம இந்த மண்ணுக்கு பன்னிட்டு இருக்குற கொடுமை தான் அசிங்கம். காட்டை அழிச்சிட்டம் மழை இல்லாம போயிட்டு. மணல் எல்லாத்தையும் அள்ளிட்டம் மழை பெஞ்சாலும் சேர்த்து வைக்க முடியாம போயச்சு. ஏற்கனவே அழிஞ்சிட்டு இருக்கு விவசாயம். இதுக்குல கண்ட கண்ட Chemical உரம், பூச்சி மருந்து எல்லாம் போட்டு மண்ணை மலடாக்கிட்டம். மிஞ்சி இருக்கிறது என்ன? நம்ம மலம் தான். அது தான் இந்த மண்ணை மீட்டெடுக்கிறதுக்காக ஏற்கனவே சீனா காரனும், ஜப்பான் காரனும் ஏற்கனவே இந்த விவசாயத்தில இறங்கிட்டாங்க. நம்ம விவசாய நிலத்துல ஆழ்துளை கிணறும், சுரங்கமும் தோண்டி பாழடிச்சால், வேற வழியே இல்லை. இந்த மாதிரி விவசாயத்த ஏற்றுக்கிட்டே தான் ஆகனும்.

இது தான் உங்க Future.

# சத்தமில்லா ச(காப்)தம்

கோபி பிரகாஷ் திருக்குமரநாதன்

**'என் அப்பா ஒரு முட்டை புத்தகம் கிடைப்பதாக இருந்தால் என்னையும் விற்றுவிடுவார்'**

–நா.முத்துகுமார்,
அணிலாடும் முன்றில்

வாசகர்கள் அனைவரையும் காலத்தை கடந்து அழைத்துச்செல்ல வேண்டிய பெரும் பணியொன்று தூமி குழுவினரால் என்னிடம் சில நாட்களுக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டது. இது குறுகிய நேரத்தை கொண்ட ஆனால் ஆயிரமாயிர மூளைகளின் ஆற்றலைக் குழைத்து அனைவருக்கும் அன்னமாக ஊட்டும் அன்பாலயம் பற்றிய பயணம். உங்கள் முன் தோன்றியுள்ள காலச்சக்கரத்தின் மாயக்கண்ணாடி வழியே மெதுவாக நுழைந்து மறுபக்கத்தின் வழியே குறிஞ்சி மண்ணில் உங்கள் வலது காலை அரவமில்லாமல் எடுத்து வைத்து என்னை பின் தொடருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போது நாங்கள் கொ.பி 1 இல் இருந்து கொ.மு 99 இற்கு காலசக்கரத்தின் வழியே நூறு ஆண்டுகள் பின்னோக்கி பயணித்துள்ளோம். குறிஞ்சி மலைகளைத் தாலாட்டி விட்டு தவழ்ந்து வரும் தென்றல் உங்கள் களைப்பை போக்கியிருக்கும் என்ற நம்பிக்கையில் அதோ அங்கே பாருங்கள்!,

கொழும்பு "ரெஜினா வலவ்வ" என்ற காணியும் கட்டடமும் வாங்கப்பட்டு "கொலேஜ் ஹவுஸ்" என்ற பெயர் சூட்டப்பட்டு பல்கலைக்கழகக் கல்லூரியானது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதை எண்ணி பல்வேறு உள்ளங்கள் ஆனந்ததில் கண்ணீர் மல்கி கொண்டிருக்கின்றார்கள். ஆனால் " இந்த கண்ணீர் துளிகளுக்கு பரிசாக



பிற்காலத்தில் இதே மண்ணில் அருணாசலம், இராமநாதன், அக்பார், ஜயதிலக்க, மார்க்ஸ், ஜேம்ஸ் பீரிஸ், டீ. ஆர் விஜயவர்தன என்ற அவர்களது பெயர்களை தாங்கிய வண்ணம் கதவுகள் திறந்தாலும் கூண்டை விட்டு அகல மறுக்கும் இளம்பறவைகளின் விடுதிகளாய் மாறி விடும் என்பது" இப்போது அவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.



சரி இப்போது இங்கே பாருங்கள். மாகவலி பாய்ந்து வருகின்றது அல்லவா இங்கே தான் தனக்கே உரித்தான "துரைவிதி"க்கு அமைய கட்டட நிர்மாணிப்புத்துறையே அசந்து போகும் வண்ணம் அசைந்தாடும் வகையில் ஒற்றைத் தூணில் பாலத்தை கட்டியெழுப்ப பேராசிரியர் துரைராஜா ஐயா அவர்கள் இன்னும் பதின்மூன்று ஆண்டுகளில் மண்ணில் அவதரிக்க போகின்றார். "ஆம் அது என்ன வானத்தில் எதோ பறந்து போகின்றதே " அது தானே தற்போது உங்கள் மனதில் தோன்றியுள்ள குழப்பம். அதுதான் சேர்.பொன்.அருணாசலத்தினுடைய மகன் பத்பநாபவினுடைய ஆத்மா. இதற்கு மேல் நாம் இங்கு நின்றால் மீண்டும் காலச்சக்கரத்தின் வழியே முன்னோக்கி செல்ல முடியாமல் போகலாம் எனவே "உடனடியாக புறப்படுங்கள்" மீண்டும் கொ.பி 1 இல் சந்திக்கலாம் அங்கே " இந்த காட்சியை எதற்காக எங்களுக்கு காட்டினாய் " என்ற உங்கள் கேள்விக்கான பதிலுடன் நிச்சயம் காத்து நிற்பேன்.

அந்த மரணம் அகச்சலவை செய்யும் சிறைச்சாலையிற்கான அடிக்கல்லை நாட்டிவிட்டுச்சென்றது. அந்த சிறைச்சாலையில் தண்டனையை அனுபவித்தால் உங்களுக்கு முளைக்கும் சிறகுகள் துனையோடு நீங்கள் ஒரே மூச்சில் ஈராயிரம் காத தூரமும் பாயலாம்





ஈரேழு உலகங்களையும் சுற்றி வரலாம். முன்வந்தவர் முன் செல்க பின் வந்தவர் பின் செல்க என்ற வரைமுறையற்ற மரணம் இளம்வயதிலேயே அருணாசலம் பத்பநாபாவை தன்னிடம் ஈர்த்துக்கொண்டது. அவரது நினைவாக சேர்.பொன்.இராமநாதன் அவரது நூற்ச் சேர்க்கையை வழங்கிய அந்த கணம்தான், எல்லாமே இருந்தும் அமைதியாக நூற்றாண்டில் காலடியெடுத்து வைக்கும் பேராதனை நூலகத்தின் பிறப்பிற்கு காரணமாயிற்று. இந்த பிறப்பிற்கு வழிசமைத்த இறப்பை சரித்திரமாக்கி நன்றி பாராட்டும் வகையில் இங்கு 1 தொடக்கம் 1401 வரை இலக்கமிடப்பட்ட நூல்கள் அருணாசலம் பத்பநாபா அவர்களுடைய நூற்சேர்க்கையாகும்.

1921 ஏப்ரல் 8 பத்பநாபா நூற்சேர்க்கைகளுடன் அறை முழுவதும் புதையல்களாய் அன்று ஆரம்பித்து "More Open than Usual" என்ற வாசகத்தோடு இன்றும் கதவை திறந்து காத்திருக்கும் பேராதனை நூலகம் இன்னும் சொற்ப நாட்களில் செஞ்சுரியை அடிக்க போகின்றது. கொலேஜ் ஹவுஸ் கட்டடத்தின் ஓர் அறையில் தன் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்து "வில்லா வெனிசியா" என்ற இரண்டு மாடிக் கட்டடத்தில் இரண்டாம் இன்னிங்ஸையும்,1952ம் வருடம் பேராதனை கலைப்பீட அறையில் மூன்றாம் இன்னிங்ஸையும் ஆடி முடிக்க 01.07.1960 இல் அத்தனை பொக்கிசங்களையும் கஜானாவாக நூலகத்திற்கான ஆறு மாடிக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இலங்கையில் அச்சடிக்கப்படும்/ வெளியிடப்படும் சகல நூல்களினதும் சட்டப்படியான நூற் பிரதிகள் (Legal deposit) என்று அழைக்கப்படுகின்ற ஐந்து பிரதிகளில் ஒன்றை 1951 முதல் பேராதனை பல்கலைக்கழக நூலகத்திலும் வைக்கப்பட்டே வருகின்றது. இதன் மூலம் சட்டப்படி ஒரு பிரதி சகல தமிழ், சிங்கள, ஆங்கில நூல்களிலும் இங்கு உள்ளன. இதில் கிட்டத்தட்ட 4,50,000 நூல்கள் உள்ளன. 1951க்கு முன் இவை இங்கிலாந்து நூலகத்தில் வைக்கப்பட்டன.

இங்கு மனித உணர்வுகளை பகிரந்து கொள்ள பாலமாய் அமைந்த 61 மொழிகளில் நூல்கள் காணப்படுகின்றன. 1961 முதல் பல்கலைக்கழகத்தில் அரபி மொழிக் கற்கை ஆரம்பிக்கப்பட்ட பின் அரபி மொழி நூல்களும் உள்ளன. நுண்கலை, தொல்லியல், செப்பேடு, சிற்பங்கள், ஓலைச்சுவடிகள், ஏடுகள் போன்றனவும் இச்சேர்க்கையில் காணப்படுகின்றன.

எழுத்தாணியால் ஏற்பட்ட வலிகளை தாங்கிகொண்டு எழுத்துக்களை சுமந்த பெருமை ஓலைச்சுவடிகளுக்கே உண்டு. அத்தகைய 5,200 ஓலைச் சுவடிகள் இங்கு 16 மொழிகளில் காணப்படுகின்றன கி.பி 1302 ஓலைச்சுவடியே மிகவும் பழமையானது. இவ்வாறான ஓலைச்சுவடி சேர்க்கையே பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தை மார்தட்டி பெருமைக் கொள்ள செய்கின்றது.

21 ம் நூற்றாண்டில் தொழிநுட்பத்தோடு போட்டிபோட்டுக்கொண்டே காலடியெடுத்து வைத்து 1992 முதல் கணணி மூலமான நூல்பதிவுகள், 2001 கிளை நூலகங்களை இணைக்கும் இணைய தொடர்புகள் , 2002 தொடக்கம் Alice for windows மென்பொருள் பாவனை, 2016 டிஜிட்டல் நூலக அபிவிருத்தி , 2020 இல் 30,000 சதுர அடிக் கொண்ட ஆறுமாடி புதிய கட்டிடம் திறப்பு என தமிழைப்போல காலத்திற்கேற்ப தன்னை தகவமைத்துக்கொண்ட அறிவுப்பசியை போக்கும் பேராதனை அன்னை எம் தமிழ்தாய்க்கும் குறையொன்றும் வைக்கவில்லை.



1921 ஆம் ஆண்டு முதல் 150,000 வரையிலான தமிழ் நூற் சேர்க்கையும் இங்கு காணப்பட்டு வருகிறது. இலங்கை சேகரிப்பு, சட்ட ரீதியான வைப்பு தமிழ் நூல்கள் ஆகியவற்றோடு தனியான தமிழ் நூற் பிரிவுகள், இரவல் பகுதியிலும் தமிழ் நூல்கள் உண்டு.

இன்று இந்த மணிமகுடத்தில் 12,000 மாணவர்கள் 7,000 பட்டப்பின் படிப்பு மாணவர்கள் 3,000 உத்தியோகத்தர்கள் என ஏறத்தாள 22,000 இரத்தினங்கள் அலங்கரித்துக்கொண்டு இருக்கின்றன. மேலும் 2020 முதல் கண்டி மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு நூலக அங்கத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது.

உங்களிடமிருந்து விடை பெற முன்னர் இங்கு நான் நன்றி கூற மிகவும் கடமைப்பட்ட ஒருவர் 1942 இலங்கை பல்கலைகழகத்தின் முதலாவது நூலகராக பணியாற்றிய ரெஜினன்ட் ஸ்டீபன் வரிசையில் எட்டாவது நூலகராக 2015 முதல் பணியாற்றி வரும் ஆர்.மகேஸ்வரன் அவர்கள். அவருடைய கட்டுரையில் உள்ள தரவுகளை உசாத்துணையாகக் கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

இப்போது நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும் துமி மின்னிதழ் தொடங்கி எத்தனையோ மின்னிதழ்கள், மின்புத்தகங்கள் தொட்டவுடனேயே வாசிக்க கிடைத்தாலும் ஒரு மழலையைப்போல எம் கைகளில் தவழச்செய்து அட்டைப்படத்தை வருடியவாறே காகிதங்களை புரட்டுகையில் வருகின்ற நாற்றத்தை நுகரும் வேளையில் எம்மோடு அலுக்காமல் உரையாடுகின்ற புத்தகங்களிற்கு அவை ஈடாகுமா என்றால் அது கேள்விக்குறி தான். நகர மறுக்கும் நிமிடங்களில் புத்தகத்துக்குள் புதைந்துவிட பிராவாகிக்கின்ற வெள்ளத்தில் நீங்களும் மூழ்கிவிடுங்கள் நீச்சலை அது நிச்சயம் கற்றுத்தரும்.





# இறையாண்மை




அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

## இறையாண்மையின் வரலாறும் வரையறையும்

ஆங்கிலத்தில் "Soveignity"என்று குறிப்பிடப்படும் சொல் "Supreme Powers" உச்ச இறையாண்மை அதிகாரம் என்று பொருள் படும். ஒரு நாட்டின் அரசுக்கு அந்நாட்டின் மீதுள்ள முழுமுதல் அதிகாரம் என்பது இதன் பொருள். நாட்டின் அடிப்படைக் கூறுகளுள் ஒன்றான இறையாண்மை மிகவும் சிக்கலான ஒரு சொல் ஆகும்.

பிரெஞ்சு எழுத்தாளரான ஜீன் போதின் (Jean Bodin) தமது The Six Books of the Republic '1576' என்ற நூலில் இந்த சொல்லை முதன்முதல் பயன்படுத்தினார்.

தாமஸ் ஹாப்ஸ், ஜான் லாக் போன்ற ஆங்கிலேய அரசியல் அறிவியலாளர்கள், "நாடு எவ்விதம் தோன்றியது?" , 'அரசு வந்தவிதம் என்ன?' என்பது குறித்துப் பேசும் போது 'சமுதாய ஒப்பந்தம்' (Social Contract) பற்றிப் பேசினார்கள்.

தொடக்க கால இயற்கை நிலையில் மக்களுக்குத் தோன்றிய பிரச்சினைகளும், அதைத் தீர்த்துக் கொள்ள அவர்கள் ஓர் ஒப்பந்தத்தை எட்டி, ஓர் அரசைப் படைத்துக் கொண்டமையும் பற்றிப் பேசினார்கள்.

மூன்றாவதாக சமுதாய ஒப்பந்தம் பேசியவர் பிரெஞ்சு சிந்தனையாளர் ரூசோ. ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் ஏனைய இருவரிடமிருந்து மாறுபட்டது.

**முழுமையான இறையாண்மையை (Absolute Sovereignty) மன்னனுக்கு உரித்தானதாகக் காட்டிய தாமஸ் ஹாப்ஸிடமிருந்தும், "அரசை சமூகமே உருவாக்கியது, ஆகவே அரசை எதிர்த்து மக்கள் புரட்சி செய்யலாம்"** என்றுகூறி அரசையும், சமூகத்தையும் இறையாண்மை உடையவையாகக் காட்டிய ஜான் லாக்கிடமிருந்தும் மாறுபட்ட சிந்தனையை அளித்தார்.

ஆரம்ப காலத்தில் மக்கள் உன்னதக் காட்டுமிராண்டிகள் (Noble Savages) கால ஓட்டத்தில் உயிருக்கும் உடமைக்கும் ஆபத்தான சூழல் உருவானது. ஆகவே மக்கள் சமூகம் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தது. அதன்படி சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் உரிமைகளை சமூகத்திடம் ஒப்படைத்தனர். ஓர் அரசியல் சமூகம் உருவானது.

அந்த சமூகத்தின் பொது விருப்பம் (Social Contract) இறையாண்மை உடையது.

அந்த "பொது விருப்பம்" என்பது தனிமனிதர்களின் விருப்பமும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் விருப்பமும் ஆகும். அது பெரும்பான்மையானவர் விருப்பம் அல்ல. அது பொது நலன் நாடும் விருப்பம் ஆகும். அதுவே ஒவ்வொருவரின் உண்மையான விருப்பம் என்று ரூசோ கூறினார்.

பொது விருப்பமே, ஒரு நிர்வாக எந்திரத்தை, அரசைப் படைத்தது. அரசு என்பது பொது விருப்பத்தை நிறைவேற்றும் ஒரு நிர்வாகக் கருவிதான். அது இறையாண்மை உள்ள மக்களால் உருவாக்கப்படுகிறது. அரசு என்ற முகவரை (Agent) மக்கள் எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம் என்று ரூசோ கூறினார்.

சட்டங்கள் என்பவை பொது விருப்பத்தின் வெளிப்பாடுகளே. ரூசோ இவ்விதம் மக்களின் இறையாண்மையயை (Popular Sovereignty) உயர்த்திப் பிடித்தார்.

ரூசோவின் சிந்தனைகள் பிரெஞ்சுப் புரட்சியையும், அமெரிக்க விடுதலைப் போரையும் உந்தி உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்தன.



பிரெஞ்சுப் புரட்சி ஐரோப்பா முழுவதும் "தேசிய" உணர்ச்சியை பல்வேறு மக்களிடம் ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து ஐரோப்பியப் பேரரசுகளிடமிருந்து விடுபட்டு தேசங்கள் எழுந்தன. ரூசோ பேசிய மக்களின் இறையாண்மை தேசங்களுக்கான இறையாண்மையாகவே இருந்தது. ஒவ்வொரு மக்களும் பிரதிநிதிகள் மூலமாக அன்றி, நேரடியாகவே தங்களை ஆண்டுகொள்ள வேண்டும் என்று கருத்தறிவித்தார். மக்களுடைய இறையாண்மையை வேறொரு அமைப்பு பெறமுடியாது என்பது அவரது எண்ணம்.

**ஐரோப்பாவில் ரூசோவின் சிந்தனைகள் 'தேசிய இறையாண்மை' (National Sovereignty) என்ற கோட்பாட்டு வடிவத்தைப் பெற்றது.**

ஒவ்வொரு தேசிய இனமும் தன் இறையாண்மையைத் தானே கொண்டிருக்கிறது. ரூசோவின் 'பொது விருப்பம்' கோட்பாடு, ஒரே மொழி, ஒரே தேசிய இனம், குறுகிய பரப்பு, மக்களே நேரடியாக அரசில் பங்கு பெறுதல் ஆகியவற்றுக்குச் சார்பாக இருந்தமையால், அது தேசங்களின் இறையாண்மை கருத்தாக்கத்துக்கு ஆதரவாக இருந்தது.

**தேசிய இறையாண்மை (National Sovereignty) என்பது ஒரு கூட்டு இறையாண்மை (Collective Sovereignty) ஆகும்.**

ஒவ்வொரு மனிதனும் இறையாண்மை உள்ளவன் என்பது ஜனநாயகக் கோட்பாடு. ஒவ்வொரு மனிதனுக்கும் தன் மீது, தன் உடல் மீது முழு உரிமை இருக்கிறது. இது ஆள் உரிமை அல்லது ஆளுடைமை உரிமை (Personal Liberty) என்று கூறப்படுகிறது.

**தான் எப்படி இருக்க வேண்டும் என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. இதுவே மனிதனின் "Self determination" உரிமை ஆகும். இது தனிமனிதனின் இறையாண்மையைக் குறிக்கிறது.**

ஒரு தேசிய இனம் என்பது ஒரு பெரிய விரிவாக்கப்பட்ட மனித உரு (Expanded Self) போன்றது. ஓரினத்தின் இறையாண்மை (National Sovereignty)என்பது ஒரு கூட்டு இறையாண்மை ஆகும். தேசிய இனத்தின் இறையாண்மையை மறுப்பது என்பது அந்த இனத்தின் ஒவ்வொரு மனிதனின் இறையாண்மையை மறுப்பது ஆகும். இது ஜனநாயகத்தின் சாரத்தையே மறுப்பது ஆகும்.

**ஒரு தனிமனிதனுக்கு தன் தீர்மானிக்கும் உரிமை அல்லது சுயநிர்ணய உரிமை ( Self-Determination) உண்டு என்றால், அதே உரிமை அந்த தேசிய இனத்துக்கும் உண்டு. இதை உலகப் பிரகடனங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.**

தேசிய இறையாண்மை (National Sovereignty) என்ற சொல் முதன் முதலாக பிரெஞ்சுப் புரட்சியின் போது வெளியிடப்பட்ட "மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைப் பிரகடனத்தில்" (Declaration of the Rights of Man and Citizen) தான் பயன்படுத்தப்பட்டது.

தேசிய இறையாண்மையும், மக்கள் இறையாண்மையும் (Popular sovereignty) ஒன்றல்ல.

தேசிய இன மக்களிடம் இறையாண்மை சிதறிப்பரவிக் கிடக்கிறது என்பது பொருள் அல்ல. அதற்கு மாறாக 'ஒரு மக்கள்' அனைவரையும் ஒட்டு மொத்தமாக உருவகிக்கிற தேசிய இனத்திடம் இறையாண்மை முழுமையாகத் தங்கியிருக்கிறது என்று பொருள்.

இந்த பத்தி தினமணியில் வெளிவந்த இறையாண்மை என்றால் என்ன எனும் கட்டுரையினை தழுவி இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.

சாரல் தூறும்..............................!!!!!

கப்பச்சினோ கதைகள்

# தாஜ்மஹாலின் பேர்த்தி

தொண்டரடிப்பொடியன்

கவிதையோ, கட்டுரையோ, காவியமோ பிறக்க வேண்டுமென்றால் நான் வேண்டுமென்று அவசியமில்லை. ஆனால் அவ்வாறு பிறந்தவை தற்காலிகமாகவேனும் நிலைக்க வேண்டுமென்றால் நான் வேண்டும். கனவுகளையும் கற்பனைகளையும் தாள்களில் வழியிலாவது நிஜமாக்கும் ஒரு கவிஞனின் எழுத்தாணி நான்.

ஔரங்க சீப். அக்பர் வழியில் வந்த மொகலாயப்பேரரசன். இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமென்றால் சாஜகானின் புதல்வன். கலைகளுக்குள்ளும் காதலுக்குள்ளும் மூழ்கி தாஜ்மஹாலை தன் கண்ணீரால் தினந்தோறும் கழுவிக்கொண்டிருந்தான் சாஜகான். காதலில் திழைத்தவனின் விதி பிழைத்தால் அவன் வாழ்க்கையில் மீண்டும் பிழைத்ததாக சரித்திரம் இல்லையென நிறுவுவதற்கான ஒரு வாழ்க்கையை சாஜகான் வாழ்ந்து கொண்டிருந்தான். அவன் வாழ்ந்து கொண்டிருந்தான் என்பதை விட செத்துக்கொண்டிருந்தான் என்பது தான் உண்மை.

மொகலாயப்பேரரசின் கருவூலம் நிர்மூலமாகிக் கொண்டிருந்தது. காதலால் கலை வளர்ந்தது. கலையால் கஜானா காலியானது. தாஜ்மஹாலுக்காக அதாவது தன் காதல் மனைவியின் கல்லறைக்காக மக்கள் பணத்தை மன்னன் பயன் படுத் தியதாக ஆங்காங்கே புரட்சிகள் வெடித்தன. பல தார சக்கரவர்த்தி என்பதால் சிம் மாசனத் துக் காக புத்திரர்கள் மோதுண்டனர். அவர்களை அடக்கி அரியணை ஏறினான் ஔரங்க சீப். தேசத்து நிதியை சமாதி கட்டியதற்காக தந்தையை அந்த சமாதிக்குள்ளேயே ஔரங்க சீப் சிறை வைத்ததாக பேசிக்கொண்டார்கள். ஆனால் அதற்கு முன்பதாகவே சாஜகானின் உலகம் அந்த மும்தாஜ் மஹாலுக்குள் முடங்கி விட்டது.



மொகலாயப்பேரரசின் கைதி சாஜகானால் பேரரசன் ஔரங்க சீப்பிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. உடனடியாகவே அது நிராகரிக்கப்பட்டது. தாஜ்மஹாலுக்கு அருகில் தனக்கொரு சமாதி மஹால் வைக்கக் கேட்டான் முன்னாள் மன்னன். மக்கள் பணத்தில் வீண் செலவென்று மறுத்தான் இன்னாள் மன்னன். தன் சிறைக்கூடத்துக்குள்ளேயே சமாதி வைக்கப்பட்டானாம் சாஜகான். ஆம், தாஜ் மஹாலில் தான் காதலர்கள் இருவரும் மீளாத்துயில் கொள்வதாக சொல்லப்படுகிறது.

தாஜ்மஹாலின் பேர்த்தியைச் சொல்லப் போவதாக சொல்லிவிட்டு தாஜ்மஹாலைப்பற்றி ஏன் சொல்கிறேனென்று தானே யோசிக்கிறீர்கள்? தந்தையின் கலையை மட்டுமல்ல தந்தையின் காதலையும் மதிக்காதவன்தான் அந்த மதம் பிடித்த ஔரங்க சீப். அவனைப்பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இதைப்பற்றி தெரிந்திருந்தும் ஒருத்தி அதை மறந்து விட்டாள். யார் அவள்? அவள்தான் இந்த கதையின் நாயகி!
தாஜ்மஹாலின் பேர்த்தி! ஜெகபுன்னிசா!

கலையும் காதலும் ஒதுக்கப்பட்ட ஔரங்கசீப்பின் அரசவையில் கவிதைகளுக்கு மட்டும் தடைவிலக்கு அளித்திருந்தான். கவிதைகளை அவன் கலையாக ஏற்கவில்லைப்போலும். சமாதி ஒன்று கலையாகி உயிர் வாழும் அந்த தேசத்தில் கலையானது கவிதை வடிவிலாவது நிலைகொண்டதாய் சந்தோசப்பட்டேன்.


மொகலாயப்பேரரசின் ஆஸ்தான கவிஞன் அகில்கானின் கவிதைகளால், இல்லை! இல்லை! காதலால் அரசவையே திளைத்துக்கொண்டிருந்தது. உயிரிலும் உணர்விலும் காதல் நிரம்பாத ஒருவனால் இவ்வாறு கவி புனைய முடியாதென்று அவனது எழுத்தாணியான எனக்கே தெரிகின்ற போது அரசவை பிரதானிகளுக்கு தெரியாதா என்ன? வழமையாக கவிதைகளை அரசவையில் அடித்தொண்டையால் முழங்குபவன் இன்று ஆழ்மனதால் முனகினான்.

“என்ன அகில்கான்? காதலிக்கிறாயா? உன் இதயம் வேறெங்கோ துடிப்பதாகவும், வேறொரு இதயமே உனக்குள் துடிப்பதாகவும் தெரிகிறதே அகில்கான்? ”
எள்ளலோடு கேட்டான் அரசன்.

காதலை வெறுப்பவன் எப்படி காதலை நகைக்கிறான் என்றுதானே நினைக்கிறீர்கள். பிற்போக்குத்தனமானவர்களின் பிரதிநிதி தான் ஔரங்க சீப். வெளிப்படையாக காதலை எதிர்க்க விருப்பமில்லாதவன். பக்கத்து நாட்டில், பக்கத்து வீட்டில், பக்கத்து தெருவில் காதல் இருக்கலாம். அதை அவன் ரசிப்பான். ஆனால் அவன் நாட்டில், அவன் தெருவில், அவன் வீட்டில் காதல் இருந்தால் கொதிப்பான். எப்படி கொதிப்பான் என்பதை அறிய கதையின் இறுதி வரை காத்திருங்கள்.

ஔரங்க சீப்பை பொறுத்த வரை அகில்கானின் காதல் பக்கத்து வீட்டுக்காதல். ஆனால் அது அவன் வீட்டுக் காதல் என்பதை காதலர்களிருவரும் நானும் மட்டுமே அறிவோம். அரசன் கேட்டது போல அகில்கானின் இதயம் வேறெங்கோ துடிக்கவில்லை, ஔரங்க சீப்பின் அந்தப்புரத்தில்த்தான் துடித்துக்கொண்டிருந்தது. அந்தப்புரத்துக்கும் கவிதைகள் கேட்க வேண்டுமென்றுதான் ஆரம்பத்தில் கவிதைகளை முழங்கினான் அகில்கான். ஆனால் இப்போதெல்லாம் அந்தப்புரத்தில் ஒத்திகை பார்க்கப்படும் கவிதைகள் தான் அரசவையில் அரங்கேற்றப்படுவதால் முனகினாலே அவனுக்கு போதுமானதாக இருக்கிறது. அந்தப்புரத்துக்கு வெளிப்படையாகப்போகும் ஒரே ஆண் ஔரங்கசீப்! அந்தப்புரத்துக்கு இரகசியமாகச் போகும் ஒரே ஆண் அகில்கான்!

தன் மகளைத்தான் அகில்கான் காதலிக்கிறான் என்பது தெரியாமலே, அகில்கானின் காதல் கவிதைகளை எள்ளி நகையாடிக் கொண்டிருந்தான் ஔரங்க சீப். காதலிக்கிறாயா என்ற காதலியின் தந்தையின் கேள்வியால் அச்சப்படவில்லை அகில்கான். பெருமைப்பட்டான். பால் வெண்மை என பால் சொல்லித் தான் தெரியவேண்டுமென்று இல்லை. தேன் இனிமை என தேன் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்று இல்லை. மயில் ஆடுமென்று மயில் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்று இல்லை. குயில் கூவுமென்று குயில் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்று



இல்லை. அது போல அகில்கானின் காதலும் சொல்லாமலே தெரிந்து கொள்ளப்பட்டது. அதுவும் அவனது காதலியின் தந்தையால்! இது அவனது காதலின் ஆழத்தையே காட்டி நிற்பதாக கர்வப்பட்டான் அகில்கான். சந்தனத்தின் வாசத்தை மூடி வைத்தால் போதுமா? அகில்கானின் காதலின் வாசம் அரசவை எங்கும் நிறைந்து அனைவரது சுவாசத்திற்குள்ளும் கலந்தது.

அரசவையில் பரவிய காதல் வாசம் அந்தப்புரத்தையும் அரசல் புரசலாக தளுவிச்சென்றது. திருடனுக்கு தேள் கொட்டிப் பார்த்திருக்கிறீர்களா? அப்படி ஒரு திருடியின் நிலையில்த்தான் ஜெகபுன்னிசா இருந்தாள். என்ன இது? காதல் திருட்டாகுமா? காதலிப்பவர்கள் திருடர்களாவார்களா? ஆம்!

எது திருட்டு? ஒருவரின் அனுமதியில்லாமல் அவருக்குரியதை தமக்குரியதாக்குவது திருட்டு என்றால் காதலும் திருட்டுத்தான்! ஜெகபுன்னிசாவும் அகில்கானும் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொண்ட போதே அவளை அவனும், அவனை அவளும் அவர்கள் அனுமதியின்றியே தமக்குரியதாக்கி விட்டார்கள். மூளை அலசி ஆராய முன்னமே இதயங்கள் இடம் மாறிவிட்டன. காதலை முற்போக்குத்தனமென்றாலும் அதிலும் சில பிற்போக்குத்தனங்கள் இருக்கத்தானே செய்கின்றன. ஆண்கள் தான் காதலை முதலில் சொல்ல வேண்டுமென்ற எழுதப்படாத விதியை அகில்கானும் மீள எழுதினான். அன்றிலிருந்து இருவரும் திருட்டுத்தனமாக சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். என்னது திருட்டுத்தனமா? ஆம்! யாரும் அறியாமல் செய்வதால் திருட்டுத்தனம் என்கிறேன். ஆனால் திருட்டு குற்றமில்லை, காதலும் குற்றமில்லை.



மாசற்ற ஜெகபுன்னிசா கண்களில் பதற்றத்தாலும் பயத்தாலும் பாசி போல் தூசிகள் விழுந்து நீர்த்துளிகளை நிறைத்தன. தன் காதல் கதை தந்தையின் காதுகளுக்கு எட்டினால்... அப்பப்பா... நினைக்கும் போதே குளமாகிவிட்டது அவள் குமுத விழிகள். நனைந்து கொண்டிருந்த அந்தப்புரத்துத் தரைகளில் ஒரு திடீர் அதிர்வலைகள். தன் கவிதைகளை ஏற்றது போல காதலையும் அரசர் ஏற்பாரென்கிற புகழ் போதையில் இரகசியமாக வரவேண்டிய அகில்கான் குதித்து குதித்து வந்தான். எல்லோரும் ஆழ்ந்து உறங்கும் நேரமென்பதால் அவன் குதூகலம் யாரையும் எழுப்பவில்லை. ஆனாலும் அந்தப்புரத்தில் ஏதோ சலசலப்பு என்ற செய்தி ஔரங்க சீப் காதுகளுக்கு எட்டியது. அரசியல் சூழ்ச்சிகளை எப்படி எதிர்கொள்வதென்று யோசித்துக்கொண்டு இருந்தவனுக்கு அந்தப்புரத்துக்குள்ளும் சூழ்ச்சிகள் நடப்பதாய் அறிக்கை கிடைத்தது. அவ்விடம் நோக்கி விரைந்தான்.

**இப்படிக்கு,**
**அகில்கானின் எழுத்தாணி**




# தனிப்பெரும் துணையே

இ.தனிஸ்ரன்


அதிகம் பேசு
ஆதி ஆப்பிள் தேடு
மூளை கழற்றி வை
முட்டாளாய் பிறப்பெடு
கடிகாரம் உடை
காத்திருந்து காண்
நாய்க்குட்டி கொஞ்சு
நண்பனாலும் நகர்ந்து செல்
கடிதமெழுத கற்றுக்கொள்
வித,விதமாய் பொய் சொல்
விழி ஆற்றில் விழு
பூப்பறித்து கொடு
மேகமென கலை
மோகம் வளர்த்து மித
மதி கெட்டு மாய்
கவிதைகள் கிறுக்கு
கால்கொலுசில் இசை உணர்
தாடி வளர்த்து தவி
எடை குறைந்து சிதை
உளறல் வரும் குடி
ஊர் எதிர்த்தால் உதை
ஆராய்ந்து அழிந்து போ
மெல்ல செத்து மீண்டு வா
திகட்ட, திகட்ட காதலி.

காதலித்து கெட்டுப் போ.
– நா. முத்துக்குமார்–

கவிதை ஒரு தேடல்.
***



வாசிப்பு எப்போதும் சிந்தனையின் பல ஜன்னல்களை திறந்து விடும். இவன் வாசிப்பை ஆரம்பித்தது சுஜாதாவிடமிருந்து தான். அவரிடம் இருந்து தான் இவனுடைய வாசிப்பும் விரிவடைந்தது. குறிப்பாக கடவுள், அண்டம், குவாண்டம் இயற்பியல், சமூகநீதி, பொதுவுடமை , அரசியல் என்ற அனைத்திலும் இவன் சிந்தனையை கிளறி விட்டு தேட வைத்த பெருமை ரங்கராஜனுக்கே.



"நாட்டில் உண்டு ஆயிரம் ராஜ ராஜன் தான்
ராஜனுக்கு ராஜன் இந்த ரங்கராஜன் தான்"

நல்லூர்த்திருவிழாவில் வாங்கிய சுஜாதாவின் "கடவுள்" என்ற புத்தகத்தில் அவர் எதையோ விளக்குவதற்காக ஸ்டீபன் ஹாங்கிங்ஸின் "Black holes and baby universe and other essays , The brief history of time" என்ற இரு புத்தகங்களின் பெயர்களை ஆதாரமாக குறிப்பிட்டிருந்தார். அந்த சிராய்ப்பிலிருந்து தான் ஸ்டீபன் மீதும் அண்டவியல், குவாண்டம் இயற்பியல் மீது காதலாகவும் கடவுள் இருக்கிறாரா? இருந்தால் எங்கே என்ற கேள்வியாகவும் மாறியது.

"கடவுள் இருக்கின்றானா மனிதன் கேட்கிறான்
இருந்தால் உலகத்திலே எங்கே வாழ்கிறான்"

தேடலின் தொடர்ச்சி செயற்பாடற்று கிடந்த நரம்பிணைப்புகளுக்கெல்லாம் இரசாயன மின்சாரம் பாய்ச்சி ஒவ்வொரு நரம்பிணைப்பு குமிழையும் ஒளிரச்செய்தது.

//இந்த வாழ்க்கையே ஒரு தேடல்தான்
அதை தேடித் தேடி தேடும் மனது தொலைகிறதே//

இங்கே ஒன்றுமே இருக்கவில்லை. இடம் இருக்கவில்லை. நேரம் இருக்கவில்லை. ஆனால், ஏதோ ஒரு ஒற்றை அடர் திணிவு இருந்ததாம்.

பௌதிக இரசாயன மாற்றங்களினால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அதுவாகவே வெடித்தது. பெருவெடிப்பு என்று பெயர். வெடிப்பின் போது வெளிவிடப்பட்ட சக்தியை கொண்டு அது விரைவாக விரிந்தது. பிரபஞ்சம் உருவானது. இடம் பிறந்தது. நேரம் பிறந்தது. இப்பொழுது இடமும் நேரமும் இருக்கிறது ஆனால் இல்லை. இல்லாததிலிருந்து வந்தது இல்லை தானே! பிரபஞ்சம் இன்னும் இன்னும் விரிகிறது. அந்த ஒற்றைப்புள்ளிக்கு முன்னால் என்ன இருந்தது என்று விஞ்ஞானம் இன்னும் தேடிக்கொண்டிருக்கிறது.

//தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும்
தேடல் என்பது உள்ள வரை வாழ்வில் ருசியிருக்கும்
அட பாடல் போல தேடல் கூட ஒரு சுகமே//



மூளையின் நரம்பு கலங்களில் மைனஸ் எழுபது மில்லி வோல்ட் ஓய்வு அழுத்தத்திலிருந்து பிளஸ் நாற்பது மில்லி வோல்ட் தாக்க அழுத்தம் பிறக்க பிறக்க மயலின் கணுக்கள் வழியே தாவிக்குதித்து ஓடிய கணத்தாக்கு, கடவுள் இல்லை - கடவுள் பொய் - உலகம் மாயை என்று சொன்னது.

"கல்லை மட்டும் கண்டால் கடவுள் தெரியாது
கடவுள் மட்டும் கண்டால் கல்லடி தெரியாது"

**கடவுள் ஒரு தேடல்.**

***

நான் என்பது என்னுடைய ஜாதி, மதம், இனம், மொழி, நாடு என்ற இந்த வரையறைகளினால் தான் அடையாளப்படுத்தப்படும் என்றால், மன்னித்துவிடுங்கள். இவை அனைத்தும் என்னை கருவாக்கிய விந்தும் முட்டையும் பிறக்க முதலே உருவான கட்டமைப்புக்கள். இந்த சட்டகத்தினுள் சுருங்கிக்கொண்டவன் நான் இல்லை.




"நீ என்பது உடலா உயிரா பெயரா
நீ என்பது செயல்"

இது வைரமுத்து சொன்னது. இதில் தவறு இருக்கிறது. உண்மையில் நான் என்பது என் சிந்தனை. என்னை சூழ்ந்த செயல்கள் அனைத்துமே என் சிந்தனைக்கு கட்டுப்பட்டதல்ல. ஆனால் என் சிந்தனை எனக்கு தனித்துவமானது. அதன் விரிவுக்கு இங்கே ஏற்கனவே போட்டு வைத்த வேலிகள் முட்டுப்போட்டாலும், என் சிந்தனை எனக்கு மட்டுமே உரியது. இந்த பிரபஞ்சத்தின் ஒளி அது. என் உடலும் இந்த அண்டமும் ஒரே பதார்த்தங்களின் வேறுபட்ட சேர்க்கைகளினாலானவை. இந்த உடல் பிரபஞ்சத்தின் ஒரு துகள். சிந்தனை எனும் நான் இந்த பிரபஞ்சத்தின் அதிர்வு.

"அண்டத்திலுள்ளதே பிண்டம்
பிண்டத்திலுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமு மொன்றே
அறிந்து தான் பார்க்கும் போதே"

ஒற்றுமே இல்லாத இடத்தில் இருந்து பிறந்த அண்டத்தில் இயங்கும் ஒன்றுமே இல்லாதவன் நான். எங்குமே நிறைந்தவன். நான் என்ற என் சிந்தனைக்கு கட்டுத்தறி இல்லை. அது பிரபஞ்ச வெளியெங்கும் இன்னிசை படிக்கும் மெல்லிசையாய் மிதக்கும். நான் கடவுள்.






//உயிர் ஒன்று இல்லாமல்
உடல் இங்கு நிலையாதே
உயிர் என்ன பொருள் என்று
அலைபாய்ந்து திரியாதே
வாழ்க்கையின் வேர்களோ
மிக ரகசியமானது
ரகசியம் காண்பதே
நம் அவசியமானது//

**"நான்" என்பது ஒரு தேடல்.**

***

கம்பியூட்டரில் ஏதோ வேலையில் பிஸியாக இயங்கிக்கொண்டிருப்பீர்கள். ஹெட்செட்டில் பாடல் அதுவாக பாடிக்கொண்டிருக்கிறது. உங்கள் சிந்தனை எல்லாம் வேலையில் குவிந்திருக்கிறது. அந்த நிலையில்,

ஏதோ ஒரு பாடல். நீங்கள் முன்னர் கேட்டதாகவே இருக்கும். அப்பொழுது தான் நீங்கள் முதன்முறையாக கேட்பதாக தோன்றும். ஏற்கனவே கேட்டிருந்தாலும் அணு அணுவாக அதன் அங்கதச்சுவையை ரசித்திருக்க மாட்டீர்கள். இசையின் ஏற்ற இறக்கங்களில் மூழ்கி குளித்து ஆனந்த நடனம் ஆடியிருக்கமாட்டீர்கள். வரிகளில் வார்த்தைகள் காட்டும் ஜாலத்தில் தொலைந்திருக்க மாட்டீர்கள். உள்ளங்காலில் இருந்து உச்சம் தலை வரை பரவும் ரசனை மின்சாரத்தில் சிலிர்த்திருக்க மாட்டீர்கள். திடீரென்று அது உங்களை ஆழ்ந்த துயிலில் இருந்து தட்டி எழுப்பும்.



//இன்னிசை பாடிவரும்
இளம் காற்றுக்கு உருவமில்லை
காற்றலை இல்லையென்றால்
ஒரு பாட்டொலி கேட்பதில்லை//

காற்றலை இல்லை என்றால் ஒரு பாட்டொலி கேட்பதில்லை!

வளியில் நெருக்கமும் ஐதாக்கமும் நடப்பதால் தான் ஒலியலை பயணம் செய்கின்றது. ஒலி நெட்டாங்கு அலை. பயணம் செய்ய ஊடகம் தேவை. வளி என்ற ஊடகம் இல்லை என்றால் இந்த பாட்டு கேட்காது. கவிஞன்! விண் வெளியில் பாடல் கேட்காது.

//கண்ணில்லை என்றாலோ
நிறம் பார்க்க முடியாது
நிறம் பார்க்கும் உன் கண்ணை
நீ பார்க்க முடியாது//

ஒலியை பற்றி எழுதிய கவிஞன் ஒளியை பற்றியும் எழுதியிருக்கிறான். அனைத்து பொருட்களிலும் பட்டு தெறித்து கண்வில்லையில் முறிவடைந்து விழித்திரையில் விம்பத்தை தருவிக்கும் ஒளி, கண்ணில் பட்டு தெறித்து அதே கண்வில்லையில் முறிவடையும் சாத்தியப்பாடுகள் இல்லை. தத்துவம்.

//ஒரு கானம் வருகையில்
உள்ளம் கொள்ளை போகுதே
ஆனால் காற்றின் முகவரி
கண்கள் அறிவதில்லையே//

நீங்கள் எதார்த்தமாக இயங்கிக்கொண்டிருக்கும் போது, எந்த தேவையுமின்றி கண்கள் ஒரு பக்கமாக திரும்புகிறது. அது திருவிழாவோ மணவிழாவோ இல்லை தெருவோரமாக கூட இருக்கலாம். பார்த்து பழகிய பெண் தான். ஆனால் அன்று புதிதாக தெரிகிறாள். அழகாக தெரிகிறாள். கண்கள் விரியும். நெஞ்சத்தின் சாளரம் வழி சந்தோ‘ சாரல் மனம் நனைக்கும். கவிதைகள் தளிர்க்கின்றன.

"பெயல் நீத்த வானம்
புனல் போர்த்த ஞாலம்
தையல் ஓர விழிப்பார்வை
மையல் கொள்ள வைக்கும் போதை
சாளர மேகம் தூவுது கவிச்சாரல்
தமிழ் சாஹரம் நீந்த நான் காதல் அரங்கில"

**ரசனை ஒரு தேடல்.**

***

அவள் இவனை அடிக்கடி ஆச்சரியப்பட வைப்பாள். அழகிலும் அவள் மழலையிலும் கிறங்கிப்போயிருக்கும் இவனை தன் கருத்துக்களால் தாண்டி சிந்தனை வீச்சில், அட! இப்படி நான் சிந்திக்கவில்லையே என்று செல்லமாய் குட்டி தன்னை ரசிக்க வைப்பாள். அவள் அழகு தாண்டி, மனிதத்தின் நுண்ணறிவை அவள் கையாளும் நேர்த்தியில் இவன் சொக்கிப் போய் “தன்னவள்” என்று புளகாங்கிதம் அடைந்திருக்கிறான். இது பொன்சங்கிலியாய் நீளும் வியப்புக்குறி!

//கண்ணில் காட்சி தோன்றிவிட்டால்
கற்பனை தீர்ந்துவிடும்
கண்ணில் தோன்றா காட்சியில்தான்
கற்பனை வளர்ந்து விடும்//



அவள் அழகில் கிறங்கி கவியில் மயங்கி வீழ்ந்தவன் தான். அவள் அறிவியல் வீச்சு அறியாமல் அழகியல் கீச்சின் அழைப்பிலே தன்னை தொலைத்தவன் தான்.

“சொல்லாமல் தொட்டு செல்லும் தென்றல்
என் காதல் தேவதையின் கண்கள்
நெஞ்சத்தில் கொட்டி செல்லும் மின்னல்
கண்ணோரம் மின்னும் அவள் காதல்”

இன்றோ அவள் செய்கைகளின் சேட்டைகளையும் தன்னை புலம்ப வைத்து மழலை மொழி பேசி கண்களால் வாள் வீசி இமைகளால் கவி எழுதி ஆட்சி செய்யும் சர்வாதிகாரத்தையும் அது கொடுக்கும் உம்மத்தமும் தாண்டி, அவள் சிந்திக்கும் அழகை ரசித்து ரசித்து காதலில் தொலைந்து போகிறான்.
மருவ மருவ பருவக்காதல் பெருக்கெடுக்கும். பெருக பெருக மருவக்காதல் மடை உடைக்கும்.

//குயிலிசை போதுமே அட குயில் முகம் தேவையா
உணர்வுகள் போதுமே அதன் உருவம் தேவையா//



இப்படி அவளிடம் தேடி தேடி ரசித்து உருகிய இவனிடம் அவள் கோபம். காதல் போர் தான். இவன் மேல் அதிகாரம் செலுத்தும் சர்வதிகாரி அவள். இப்பொழுது பேச மாட்டேன் என்கிறாள்.

“ஒரு நாளைக்குள்ளே மெல்ல மெல்ல
உன் மௌனம் என்னை கொல்ல கொல்ல
இந்த காதலினால் காற்றில் பறக்கும் காகிதம் ஆனேன்”

கடவுள் இல்லை என்றவன் தானே கடவுள் என்றவன் இப்பொழுது காதலில் விழுந்தவன்

தவிக்கிறான். தகிக்கிறான்.மனம் வெந்து உடல் வெம்பி விழி நீரும் அனலாகி ஆவியாகிறது.

“காதல் இருக்கும் பயத்தினில் தான்
கடவுள் பூமிக்கு வருவதில்லை
மீறி அவன் பூமி வந்தால்
தாடியுடன் தான் அலைவான் வீதியிலே”

*காதல் ஒரு தேடல்.*
***

**நீ எதை தேடிக்கொண்டிருக்கிறாயோ அது உன்னை தேடிக்கொண்டிருக்கிறது.**

**தேடலே வாழ்வின் தனிப்பெரும் துணை!**



# பார்வைகள் பலவிதம்



மொழி பெயர்க்க முடியாப் புன்னகையால்
டாவின்ஸிக்கு உயிர் தந்த மோனலிசா.
ஏற்றிக் கொள்ளும் தடுப்பு மருந்துகள்
ஏற்றுமதி செய்வதும் எமக்குப் பெருமையே.

சந்திரனார்.

உலகமே தடுப்பூசி எடுத்துக்கொள்கிறது.
தடுப்பூசி எடுக்காதவர்களை
தற்கொலைக் குண்டுதாரி என்கிறார்கள்.
தடுப்பூசி கண்டுபிடித்தவர்களை
யுக புருசர்கள் என்கிறார்கள்.
உணவு, உடை, உறையுளுடன்
ஊசியையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.
ஊசி ஏற்றாதவர்களை
கிருமிகாவிகளாக்குமாறு சட்டம் இயற்றுங்கள்.
தடுப்பூசியை வைத்து வியாபாரம் நடக்கிறது.
தடுப்பூசியை வைத்து அரசியல் நடக்கிறது.
இங்கே,
தடுப்பூசியை வைத்து கலை நடக்கிறது.

இனியவன்

உலகம் புகழ்ந்த ஓவியமே
உனக்கும் தடுப்பூசியா?


ஆனாலும் இந்தத்தடுப்பூசியால் உனக்கு
எந்தப்பயனும் இருக்கப்போவதில்லை

ஏன்?
ஏனெனில் நீ ஓர் ஓவியம்.
உன்னுடலில் எப்படி இந்த இரசாயனத்தைச்
சேர்க்க முடியும்?

இருந்தாலும் வருத்தப்படாதே.
உன் உயிரணுக்களுள் உலகின் எந்தக்
கிருமியாலும் உள்நுழைய முடியாது
உன் புன்னகையும் காலகாலத்திற்கு
நிரந்தரமாய் உன்னுடன் இருக்கும்.

இராவி நவிலன்

## அடுத்த இதழுக்கான சிந்தனை...



இந்த படத்திற்கான உங்கள்
பார்வையை உலகம் பார்க்கச் செய்ய
எழுத்துக்களாக்கி எமக்கு அனுப்பி
வையுங்கள்

www.thumi.org

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06



# சித்திராங்கதா

21

காவ்யமோகன்

## நங்கூர நம்பிக்கை

நம்பிக்கை என்பது எந்தப்புள்ளியில் ஆரம்பமாகிறது என்று யாராலும் விளக்கிச் சொல்ல முடியாது. அது ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொரு விதமாய்ப் பெருகி ஏதோ ஒரு இடத்தில் அசைக்கமுடியாத ஒன்றாக நிலைபெறுகிறது. இயற்கை மீதோ, இறைமீதோ, மனிதர்கள் மீதோ தோன்றிய- தோன்றுகிற நம்பிக்கைகள் யாவும் இவ்வாறே. நம்பிக்கை நங்கூரம் போல நிலைபெறுவது ஒன்றும் ஒரே நாளில் நிகழ்ந்துவிடும் சாதாரணமல்ல. ஒரே நாளில் அதை முழுவதுமாய் சரித்து விடவும் முடியாது.

ஆனால் அந்த நம்பிக்கையே ஓர் அழிவுப்பாதைக்கு அழைத்துச்செல்ல வல்லதாகும் போது உள்ளத்தினுள் ஏதோ ஒரு புள்ளியில் இனம்புரியாததவோர் அச்சம் உருவாகத் தொடங்குகிறது. அதுவே அந்த நம்பிக்கையை அடியோடு அழித்துவிடும் பெருஞ்சந்தேகமாக பின்னர் உருமாறுகிறது.

சங்கிலிய மகாராஜாவுக்கு இராஜமந்திரி ஏகாம்பரம் தொண்டமனார் மீதுள்ள நம்பிக்கை அவ்வாறானதொரு அழிவின் பாதையோ என்கிற சந்தேகத்தின் தொடக்கப்புள்ளி வருணகுலத்தான் உள்ளத்தில் உருக்கொண்டிருந்தது.

மகிழாந்தகன் வார்த்தைகள் அதற்கு உரமிட்டுக் கொண்டிருந்தன.

நட்சத்திரங்களையும் மூடி மறைத்துக்கொண்டு கருமேகங்கள் கூடிநிற்க, நிழல் கூட துணை நில்லாத இரவின் பொழுதொன்றில் சங்கிலியனை தனிமையில் சந்தித்த வருணகுலத்தான் இது குறித்துக் கேட்டான். சங்கிலிய மகாராஜாவிற்கு மந்திரியார் மீதுள்ளது அசைக்கமுடியாத நம்பிக்கை தான். ஆனாலும் அசைத்துப் பார்க்க முயன்று பார்த்தான்.

“மகாராஜா, என் வாக்கில் குற்றமிருந்தால் பொறுத்தருள வேண்டும். ஆனாலும் இந்தச் சந்தேகத்தை இப்போதாவது நான் தீர்த்துக் கொள்ள பெரும்பிரயத்தனம் கொள்கிறேன்.”

“கூறுங்கள் தளபதியாரே, ஏன் தயக்கம்? அறிந்த உண்மை நிச்சயம் உரைப்பேன்”

“காத்தவராயன் வழக்கிற்கும் மிக்கபிள்ளைக்கும் சம்பந்தம் எதுவும் இல்லையோ என்று ஒரு குரல் எனக்குள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. மிக்கபிள்ளை தந்திரக்காரன் தான். அவன் வார்த்தைகளை நம்பி நான் இதைக் கூறவில்லை. ஆனாலும் இந்த விடயத்தில் எனக்கு ஏதோ குழம்பமாகத்தான் இருக்கிறது. தாங்கள் அந்த உண்மையை அறிவீர்கள் போலும் என்று எனக்கு தோன்றுகிறது.”

பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த சங்கிலியன் மௌனம் கலைத்துப் புன்னகைத்தான். வருணகுலத்தான் தோள்களைத் தட்டியபடியே

“உண்மைதான் தளபதி. காத்தவராயனுக்கும் மிக்கபிள்ளைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை”

“அப்படியாயின்...?”

“தாங்கள் நினைப்பது போலவே தான். காத்தவராயன் மந்திரியாரின் இரகசிய ஒற்றன். அவன் ஊமை என்பதால் அவனுடன் பேசுவதற்கு மந்திரியாரால் மட்டுமே இயலும்.”

“ஈட்டிப்பாய்ச்சல் திட்டமும் மந்திரியார் தீட்டிய திட்டமா?”

“அது எமது திட்டம். ஆம். நானும் ராஜமந்திரியாரும் சேர்ந்து தீட்டிய திட்டம். எம்மைத்தவிர வேறு யாரும் அதை அறிய மாட்டார்கள்.”

“எனக்கு ஒன்றும் விளங்கவில்லை அரசே” என்று குழப்பத்தின் உச்சத்தில் கேட்டான் வருணகுலத்தான்.

“சொல்கிறேன் தளபதி,
தாங்கள் இங்கு வந்திறங்கிய நாளில் கோலகலமாய் வரவேற்பு ஏற்பாடு செய்திருந்தேன். மக்கள் கூட்டம் தங்களை பெருநம்பிக்கையுடன் வரவேற்க வேண்டும் என்று கருதினேன். ஆனாலும் இனி நம்பிக்கை என்பதேயற்று பறங்கியனிடம் அடி பணிவதே

சாலச்சிறந்தது என்கிற விசமப் பிரச்சாரங்களை மிக்கபிள்ளை போன்றோர் நாட்டில் தொடர்ந்து பரப்பிக்கொண்டிருந்தனர். அதை நம்பிய மக்கள் சிலர் குழப்பத்தில் இருப்பதாய் அறிந்தேன். தங்கள் வருகை யாழ்மாந்தர்க்கட்கு மீண்டும் புதுநம்பிக்கையை உண்டுபண்ணும் என்பதில் நான் எவ்வளவு உறுதியாய் இருந்தாலும் விசமப்பிரச்சாரங்களை மக்கள் விட்டு விலகி வருவதற்கு என்ன உபாயம் என்கிற சிந்தனையும் எனக்குள் இருந்து கொண்டிருந்தது. போரிட முன் எம் களைகளை நாம் அப்புறப்படுத்த வேண்டும். அதற்கு முள்ளை முள்ளால் எடுப்பது போல் இப்படியொரு திட்டத்தை ராஜமந்திரியார் முன்வைத்தார்.

தங்கள் உயிரோடு விளையாடுவதிலும், மிக்கபிள்ளை மீது வீண்பழி போடுவதிலும் எனக்கு உடன்பாடு இல்லாத காரணத்தால் நான் இதனை முதலில் மறுத்தேன்.

ஆனால் விசமப்பிரச்சாரங்கள் அரச அதிகாரிகளிடம் பரவத் தொடங்கியது. “பறங்கியனிடம் அடி பணிவதை விட்டு மன்னர் முட்டாள்த்தனமாய் கருமமாற்றுகிறார்” என்கிற பேச்சுகள் என் செவியையும் வந்தடைந்தன. இந்நேரம் தஞ்சைத் தளபதியாரின் வரவும் அநாவசியமானது எனவும் சிலர் நம்பத்தொடங்கினர். அது எத்துணை அவசியமானது என்பதை எடுத்துரைக்க மிக்கபிள்ளை போன்றோரின் விசமப்பிரச்சாரங்களில் இருந்து மக்களை விடுவிக்க மந்திரியாரின் திட்டமே சரியானது என்று நான் முடிவு செய்தேன்.

ஈழத்தின் பெருநம்பிக்கையாய் தங்களை அழைத்துவரும் போது மிக்கபிள்ளை இப்படியொரு ஈனச்செயல் புரிந்தான் என்கிற செய்தி நம்பிக்கையற்றுப் போன மனங்களில் புதிய வினாக்களை உண்டுபண்ணும். அந்த வினாக்கள் ஈழத்து மக்களின் கறை தோய்ந்த உள்ளங்களை இலக்கு நோக்கி தெளிவுபடுத்தும் என்று முழுமையாய் நம்பினோம்.”

எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டு அமைதியாகவே நின்றான் வருணகுலத்தான்.

“தங்களது உயிரோடு விளையாடியதாய் தயவு கூர்ந்து எண்ணவேண்டாம் தளபதியாரே, தங்களை இந்தச்சிற்றீட்டி எதுவும் செய்துவிடக்கூடாது என்பதை உறுதியாக்கிக் கொண்டே இம்முயற்சியில் இறங்கினோம். தங்களை வரவேற்க ஈழத்தின் மாவீரன் மகிழாந்தகனை அனுப்பி வைத்தோம். ஆனாலும் இந்த இரகசியம் யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தமையால் மகிழாந்தகனிடம் கூட நாம் முன்னர் எதுவும் அறிவிக்கவில்லை. ஆனாலும் முன்னெச்சரிக்கை செய்தி ஒன்றை பெருவணிகர் எச்சதத்தர் மூலம் மகிழாந்தகனுக்கு தெரியப்படுத்தியிருந்தேன். அவரும் மன்னார் கடற்பகுதியில் பறங்கியர் பக்கம் பேச்சு அடிபட்டதாக இதனை மகிழாந்தகரிடம் முன்கூட்டியே தெரிவித்திருந்தார்.

அத்தோடு மகிழாந்தகன் காண்கிற போதிலே காத்தவராயனை ஈட்டிப்பாய்ச்சல் நிகழ்த்த கூறியிருந்தோம். இவ்வாறு எந்தவகையிலும் தங்கள் பாதுகாப்பிற்கு குந்தகம் விளையாத வண்ணமே செயற்பட்டோம். மகிழாந்தகன் அந்த ஈட்டியை எப்படியும் தடுத்து தங்களை காத்துவிடுவான் என்பதில் எமக்கு துளியளவும் ஐயமிருக்கவில்லை. ஆதலாலே தைரியமாக இக்காரியத்தில் முன்னேறினோம்” என்று சாந்தமான குரலில் கூறிமுடித்தான் சங்கிலியன்.

“இப்போது தான் எல்லாம் புரிகிறது மகாராஜா, அப்படியென்றால் காத்தவராயன் சிறையிலிருந்து தப்பவில்லை”

“ம்… நானே தான் விடுவித்தேன். மாருதவல்லி குறித்து தகவல் ஏதும் அறிவதற்காக. அன்றி நமது பாதாள சிறையிலிருந்து தப்புவதும் தப்பியவரை விட்டு வைப்பதும் எப்போதும் நடவாத காரியம் தளபதியாரே”

“புரிகிறது மகாராஜா, மந்திரியாரின் ராஜதந்திரங்களை எண்ணி நான் வியக்கிறேன். தஞ்சையில் ராஜகுரு கோவிந்த தீட்சதரை எனக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறார் ராஜமந்திரியார்”

“உண்மைதான் தளபதி, அவருடைய ராஜ தந்திரங்களின் நோக்கம் நம் கற்பனைகளில் கூட சில நேரங்களில் எட்டுவதில்லை. காலம் கடந்துதான் எமக்குப் புரியத் தொடங்கும். காத்தவராயன் சம்பவம் நடந்தபின் ஊர்மக்கள் கூடியே காத்தவராயனை சிறைபிடித்து மகிழாந்தகனிடம் ஒப்படைத்தனர் என்கிற செய்தியை கேள்வியுற்றதும் தான் அவரது திட்டத்தின் வெற்றி எனக்கு முழுவதுமாய்ப் புரிந்தது.

ஆதலால் அவர்மீது நாம் எப்போதும் வீண்சந்தேகம் கொள்ளத்தேவையில்லை தளபதி, என் உள்ளத்திலும் ராஜமந்திரியார் மீது சந்தேகம் என்பது ஒருகாலும் உருவாகாது.”

“தெளிந்தேன் அரசே, ஆனால் இதனை மகிழாந்தகனிற்கும் தெரியப்படுத்தியிருக்க லாமே”

“சொல்லியிருக்கலாம் தளபதி, ஆனால் மகிழாந்தகனிற்கும் இந்த உண்மை அன்றே தெரிந்திருந்தால் மிக்கபிள்ளை மீது ஆவேசமாய்ப் பழி விழுந்திராது. எல்லாம் நாடகபாணியில் இருந்திருந்தால் யாரும் அன்று நம்பியிருக்கமாட்டார்கள்”

“உண்மைதான் அரசே, நான் கூட இதுவரை இப்படி ஒரு கோணத்தில் சிந்தித்திருக்கவில்லை”


“ஆனாலும் இது இனியும் இரகசியமாகவே இருக்கட்டும் தளபதியாரே. அதுவே நல்லது என்று கருதுகிறேன்.”

“நிச்சயம் அரசே, தங்கள் ஆணையை நான் மீறமாட்டேன்.”

கார்மேகம் முழுவதுமாய்க் கலைந்து விலகியபின் இருள் வானில் நட்சத்திரங்கள் மின்னத் தொடங்கியன. வானத்தை ஒத்த தெளிந்த மனத்தோடு வருணகுலத்தான் அங்கிருந்து மந்திரிமனை நோக்கிச் சென்றான்.

ஒரு விடயத்தை எதிர்ப்பதா? ஏற்பதா? என்கிற குழம்பத்தின் தொடக்கத்தில் மக்கள் நிற்கிற போது அதனை எதிர்த்தே ஆகவேண்டும் என்கிற பக்கம் மிக்கபிள்ளை போன்றோரின் அடாவடியான செயல்கள் மூலம் வலுக்கட்டாயமான திணிப்பு நேருமாயின் மக்கள் இயல்பாகவே அந்த விடயத்தை எதிர்ப்பதை விட்டு ஏற்றுக் கொள்வதற்கு நேசம் கொள்வார்கள். வருணகுலத்தான் வரவையும் பறங்கியருக்கு எதிரான போராட்டத்தையும் மக்கள் ஏற்கவும் தயாராவார்கள். இந்த சத்திரியதந்திரத்தையே ராஜமந்திரியார் முயன்று பார்த்திருக்கிறார். அதில் வெற்றியின் இலட்சணங்களையும் கண்டு கொண்டார். ஆனால் அது நிரந்தரமானதா என்பது தான் அடுத்த கேள்வி?

பதில்கள் வரும்...



## மருத்துவம் போற்றுதும்


# வேர் சிகிச்சை
[Root Canal Filling]




1. வேர் சிகிச்சை என்றால் என்ன?

உங்கள் பல்லானது சொத்தை அடைந்துவிடின் அல்லது உடைந்து போய்விடின் அந்த பல்லினை சில சமயங்களில் நிரப்பி வைத்திருக்க முடியும். பற்சொத்தையானது அல்லது பல்லின் உடைவானது அப்பல்லின் பன்மச்சைக்குச் சென்றுவிட்டால் சாதாரணமாக நிரப்ப முடியாது.
இருப்பினும் அப்பற்களை வேர் முறை சிகிச்சை செய்வதன் மூலம் வலியின்றி அடைத்து வைத்திருக்க முடியும்.
வேர் சிகிச்சையில் பல்லின் உள்ளே உள்ள பன்மச்சையினை [pulp] அகற்றி சுத்தம் செய்து அடைக்கப்படும்.

பற்களின் பாதுகாக்கும் கவசங்களாக எனாமல் [Enamel] , டென்டின் [Dentine] உள்ளது. எனாமலைத் தாண்டி பற்சொத்தை ஆழமாக டென்டினை அடையும் போது பல் கூச்சம் ஆரம்பிக்கும். இன்னும் ஆழமாக பன்மச்சைக்கு அருகினில் செல்லும் பொழுது தண்ணீர் குடிப்பது அல்லது உணவு உண்பது போன்ற தூண்டுதலின் போது பல்வலி ஏற்படும். இவ்வலியானது தூண்டுதலை அகற்றிய பின்பு நின்று விடும். மேலும் இவ்வலியானது ஒரு சில நிமிடங்களே இருக்கும். எனினும் எப்பல்லில் இருந்து வலி வருகின்றது என்பது நோயாளியினால் கண்டுபிடிப்பது கடினம். இந்த நிலைமையில் பல்லினை சாதாரணமாக பற்சொத்தையினை சுத்தம் செய்து அடைத்து/நிரப்பி வைத்திருக்க முடியும். எனினும் டெண்டினையும் தாண்டி ஆழமாக சென்று பன்மச்சைக்கு கிருமி சென்று விட்டால் சாதாரணமாக நிரப்ப முடியாது. அப்பல்லினால் வரும் பல் வலியினை சரி செய்ய பல்லினை சிறு துளை செய்து பல்லின் உட்பகுதியில் சுத்தம் செய்து நிரப்புதலே வேர் சிகிச்சை எனப்படும்.





2. பல் வேர் சிகிச்சையால் என்ன பலன்?

வேர் சிகிச்சை செய்வதன் மூலம் பல்லினை முழுமையாக அகற்றாமல் பல் வலியினை சரி செய்யும் வாய்ப்பு உள்ளது.
வலி உண்டான பல்லினை அகற்றிய பின்பு அகற்றிய பல்லினால் உண்டாகும் இடைவெளியை நிரப்ப செயற்கை பல் பொருத்த வேண்டிய தேவைப்பாடு இல்லாமல் போகின்றது.


3. வேர் சிகிச்சை சொத்தைப்பற்கள் அனைத்திற்கும் செய்ய வேண்டுமா?

இல்லை, பற்சொத்தையானது அல்லது உடைவானது பன்மச்சைக்குச் சென்றால் மாத்திரமே வேர்ச்சிகிச்சை செய்ய வேண்டும். இருப்பினும் வேறு சில காரணங்களிற்காகவும் வேர் சிகிச்சை செய்யப்படும்.



4. வேர் சிகிச்சை செய்த பல்லில் மீண்டும் பற்சொத்தை ஏற்படுமா?

வேர்சிகிச்சையின் மூலம் பல் வலியினை நீக்கி பல்லினை அகற்ற வேண்டிய நிலைமையினை மட்டுமே தவிர்க்க முடியும். எனினும் அப்பற்களிற்க்கு பற்சொத்தை ஏற்றப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. வேர்சிகிச்சை செய்த பல்லில் நரம்புகள் இல்லாத காரணத்தினால் வலி இல்லாமல் பற்சொத்தை வரக்கூடும். இருப்பினும் சிறந்த வாய் ஆரோக்கியத்தினை பேணுவதன் மூலம் root filling செய்த பல்லினை நீண்ட காலம் வைத்திருக்க முடியும்.




5. Root fillong செய்த பல்லினால் கடினமாக கடிக்க முடியுமா?

இல்லை, நரம்புகள் இல்லாத காரணத்தினால் நீங்கள் அழுத்தி கடிக்கும் பொழுது உங்களால் கொடுக்கப்படும் விசையை உங்களால் உணர முடியாது ஆதலால் நீங்கள் அழுத்தி கடிக்கும் பொழுது அதிக விசை தாக்கப்பட்டு பல் உடைய கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளது. இரண்டாவதாக பல்லின் இயற்கையான கட்டமைப்பு இல்லாத காரணத்தினாலும் ஈரலிப்பு தன்மை இல்லாத காரணத்தினாலும் உடைய கூடும்.

*சஜீவன் சத்தியசீலன்*
*பல் மருத்துவ பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*







ஈழச்சூழலியலோடு நேரடியாக தொடர்புபடுகின்ற விடயப்பரப்பாக சுற்றுலாத்துறை காணப்படு கின்றது. எமது நாடு சுற்றுலாத்துறை வழி வருவாயினை மொத்த தேசிய உற்பத்தியின் பெரும்பங்காக கொண்டமைந்துள்ளது. அதாவது 2020 ம் ஆண்டு ஏறத்தாழ **12.5%** மொத்த, தேசிய உற்பத்திக்கு சுற்றுலாத்துறை பங்காற்றியிருக்கிறது. 2001ம் ஆண்டளவில் **6.7%** ஆக இருந்த மொத்த தேசிய உற்பத்தியின் மீதான சுற்றுலாத்துறையின் பங்களிப்பானது இன்றையளவில் வருடாந்த சராசரி அதிகரிப்பாக **3.6%** இனால் வளர்ச்சியுற்று வந்திருக்கின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத்துறையானது ஈழத்தினுடைய சூழலியலில் பெரிதளவாக தங்கியுள்ள ஒரு காரணியாகும்.

எமது ஈழம் இந்து சமுத்திரத்தினுடைய முத்து என அழைக்கப்படுவதனாலும், நாட்டினுடைய அமைவிட முக்கியத்துவமும் சுற்றுலாத்துறையினுடைய ஊக்குவிப்பு காரணிகளில் ஒன்றாக காணப்படுகின்றது. மேலும் எமது நாட்டினுடைய தரைத்தோற்றம், காலநிலை சிறப்பம்சங்கள், மக்களினுடைய வாழ்வியல் வழக்காறுகள் போன்றனவும் சுற்றுலாத்துறைப்பயணிகளின் வருகைக்கு வழிகோலி நிற்கின்ற காரணிகளாகின்றன. நாட்டின் பொருளாதார கொள்கை, அரசியல் ஸ்திரத்தன்மை போன்ற கட்டமைப்பு காரணிகளும் சுற்றுலாத்துறை வருவாயினை தீர்மானிக்கின்ற காரணிகளாக காணப்படுகின்றன.



இலங்கைக்கு நாற்பக்கமும் கடலால் சூழப்பட்ட ஓர் அழகிய தீவாக அமைந்திருப்பதோடு சிறப்பான தரைத்தோற்ற அமைப்பையும் கொண்டது. மத்தியப்பகுதியில் மலைப் பகுதிகளானது ஏற்ற இறக்கமான தரைத்தோற்றமைப்பையும் ஏனைய பகுதிகளில் ஒப்பீட்டளவில் சமதரையான நிலப்பரப்பையும் கொண்டமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். ஏறத்தாழ கடல் நீர்மட்டத்திலிருந்து 2524மீற்றர் உயரமான பீதுறுதாலகால அளவான உயரிய இயற்கை எழில் கட்டமைப்புக்கொண்ட எம்நாடு. எம்தேசமானது வடக்கு தெற்காக அல்லது நெட்டாங்காக ஏறத்தாழ **435Km** நீளத்தினையும், கிழக்கு மேற்காக அல்லது அகலாங்காக **240Km** நீளத்தினையும் கொண்டமைந்துள்ளது. அதேபோல் காலநிலையிலும் மழைவீழ்ச்சி கோலங்களுக்கு ஏற்றாற்போல ஈரவலயம், உலர்வலயம், இடைவலயம் எனப்பிரிக்கப்பட்டு காணப்படுகிறது.

இவ்வழகிய சிறிய தீவினுள் **36$^{0}$C** அளவிலான உயர் வெப்பநிலையையும் **14$^{0}$C** அளவிலான குளிரான வெப்பநிலையினையும் சமகாலகட்டத்தில் அனுபவிக்கக்கூடிய இயல்தகவு காணப்படுதல் சிறப்பம்சமாகும். பல பெயர் சொல்லக்கூடிய அழகிய மலைகள், ஆறுகள், காடுகள், வரலாற்றுதலங்கள், சரணாலயங்கள், நூதனசாலைகள், நூலகங்கள், நினைவிடங்கள், கடற்பகுதிகள்

போன்ற பல்வேறுபட்ட காரணிகள் சுற்றுலாப் பயணிகளை கவரும் தளங்களாக காணப்படுகின்றன. அழகிய மலைகளும் அவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் ஆறுகளும் இயற்கையோடு எழில் கொஞ்சி தருகின்ற காட்சிகளை தரிசிக்கவெனவே பல உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்றனர். அந்த வகையில் இலங்கையின் மிக நீளமான ஆறாக காணப்படும் மாகாவலி கங்கையை ஓர் உதாரணமாக குறிப்பிடலாம். இந்த ஆறானது ஏறத்தாழ **331Km** நீளமுடையதாகும். அதே போல் அழகிய மற்றும் உயரமான நீர்வீழ்ச்சியாக பம்பரகந்த நீர்வீழ்ச்சியினை குறிப்பிட முடியும். அத்தோடு தீவளாவிய கடற்கரை பட்டிகையினுடைய நீளமானது ஏறத்தாழ **1300Km** ஆகும்.

அத்தோடு ஈழத்தினுடைய பாரிய பொருளாதாரத்துறைகளான விவசாயம், கைத்தொழலதுறை ஆகியனவும் சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதில் பெரும் பங்காற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக பல்வேறு இயற்கை அம்சங்களோடு அமைந்த ஈழச்சூழலியலானது சுற்றுலாத்துறைக்கு சிறப்பான பங்களிப்பினை வழங்குகின்ற போதிலும் நாமும் எமது, தேசத்துக்குரித்தான சுற்றுலாத்துறையினை நிலைபேறான தன்மையுடன் பேணிப்பாதுகாத்து பயணப்பட வைத்தல் அவசியமாகும். சுற்றுலாத்துறையினுடைய நிலைபேறானதன்மை என்பது குறித்த துறையினுடைய தொடர்ச்சியான இயங்குதன்மை மற்றும் வளநுகர்வின் போதான கையாளுகை என்றவாறாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும். நாம் நமது சூழல் சார்ந்த கரிசரனையோடு எமது சூழலை பாதுகாத்தும். அழகூட்டியும் வைத்திருப்பதே



சுற்றுலாத்துறையினுடைய மேம்பாட்டுக்குரிய அடிப்படை கைங்காரியமாக அமையும். சுற்றுலாத்துறைக்கென சூழலை தயார்படுத்துதல் என்பதே பெரியளவான தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்த வல்ல முயற்சியாண்மை துறையாகும்.

சுற்றுலாத்துறை, சூழல், மனிதவளம் மூன்று அம்சங்களையும் ஒன்றிணைத்து சிந்திப்போமாக இருந்தால் நிச்சயமாக நாட்டின் அனைத்து பிரஜைகளின், கூட்டுமுயற்சியே சுற்றுலாத்துறை என்றாகும். ஈழத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கும், செயற்படுத்துவதற்கும் என தனியான அமைச்சு மற்றும் அதிகாரசபை ஆளணிகள் செயற்பட்டு வருவதோடு பல தன்னார்வ நிறுவனங்களும் பணியாற்றுகின்றன. பிரதேசவாரியாக சுற்றுலாத்துறை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மிக எளிமையாக கூற வேண்டுமாயின் ஓர் பல்கலைக்கழகத்தின் வாயிலாக தன் உயர்நிலைக்கல்வியினை நிறைவு செய்து வெளியே வரும் பட்டதாரி இளைஞன் தொடக்கம், ஈழத்தின் ஏதோ ஒரு மூலையில் பின்தங்கிய பகுதியில் உள்ளூர் உள்ளீட்டு பொருள் விற்பனை செய்யும் கடைகோடி மனிதன் வரை சுற்றுலாத்துறையில் தங்கியிருப்பதோடு தாக்கமும் செலுத்துகின்றனர்.

சுற்றுலாத்துறை சார்ந்து பல்வேறு முயற்சியாண்மை முயற்சிகளை, கைத்தொழில்களை, பொழுதுபோக்கு கட்டமைப்புகளை நாம் பிரயாணிகளை கவரும் விதமாக கட்டியெழுப்ப முடியும். அப்படியான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் போது சூழலின் நிலைபேறானதன்மைக்கு பாதகமற்றதாக மேற்கொள்ளுதல் அவசியமாகும். சுற்றுலாத்துறை பாரிய இலாபமீட்டும் தொழில்முயற்சியின் பரிமாணமாகும். அந்நிய

செலாவணியை நாட்டுக்கு மீட்டுத்தரும் அரிய சந்தரப்பமாகும். ஆகையால் நாட்டின் அனைத்து குடிமக்களும் அதன் முக்கியத்துவப் பொறுப்புணர்ந்து செயற்படுதல் காலக்கட்டாயம் என்றாகிறது. நாட்டின் பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகள் சுற்றுலாத்துறையினை பெரியளவில் பாதிப்படைய செய்தன. 2004ம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை சீற்றம் எம்மவர்கள் வெளிநாட்டவர்களென ஏறத்தாழ 38000 பேரின் உயிரை காவுகொண்டது. இத்தோற்றப்பாடு சர்வதேச ரிதியில் பாரிய அச்சப்போக்கினை குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலவச்செய்தது.

அத்துடன் இதனால் கடற்கரை பகுதிகளை அண்டிய எத்தனையா கிராமங்கள் அழிவுற்றதுடன், சுற்றுலாத் தளங்களும் சேர்ந்தே அழிவுற்றதும், மாசுபட்டதுமான சூழ்நிலைக்கு ஆளாகின. தொடர்ந்து உள்நாட்டில் நிலவிய போர்ச்சூழ்நிலைகளால் பயணத்தடைகள் பெரிதும் சுற்றுலாத்துறையை பாதித்தது. அண்மையில் தேவாலயங்களிலும், சுற்றுலா விடுதிகளிலும் ஏற்படுத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதல் ஏறத்தாழ 250க்கு அதிகமான உயிர்களை காவு கொண்டது. இத்தாக்குதலால் இறந்தவர்களில் கனிசமானோர் வெளிநாட்டவர்கள் ஆவர். இதனால் சர்வதேச ரிதியில் சிவப்பு எச்சரிக்கை உருவானதோடு, பல நாடுகள் பயணத்தடை வித்தன, சர்வதேச கண்டனங்கள் எழுந்தன, இறுதியாக கொரணா தொற்றினாலும் பாரயளவாக சுற்றுலாத்துறை சரிவு கண்டமை நாமறிந்த யதார்த்த உண்மையாகும். இவ்வாறாக பல்வேறுபட்ட சம்பவங்கள் சுற்றுலாத்துறையை பாதிப்பைடைய செய்திருந்தாலும் நாடாளவிய ரீதியிலும், சர்வதேச மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட மீள் கட்டமைவு வேலைத் திட்டங்கள் ஊடாக அரசியல், சமூக, பொருளாதார.



காலாச்சார மற்றும் பண்பாட்டு ரீதியான மீள் எழுச்சி போக்குடன் இன்றும் ஆசியாவிலும், உலகளவிலும் சிறப்பான தரவரிசைக்குட்படுத்தப்பட்ட சுற்றுலாத்தளமாக நமது நாடு விளங்குகின்றது.

ஈழத்தினுடைய சுற்றுலாத்துறையின் மிகப்பாரிய கண்கவர் பரப்பாகவும், கவனத்தை ஈர்க்கும் பரப்பாகவும் யானைகளின் சவாரிகள் மற்றும் காட்சிப்படுத்தல்கள் காணப்படுகின்றன. ஈழத்தில் காணப்படுகின்ற யானை இனங்கள் ஆசியாவில் பெரிய யானை இனங்களாக காணப்படுவதுடன், அவை தமது இயற்கையான வாழிடங்களில் தற்போக்காக வாழுதலை கண்ணூடு காணுதல் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கச்செய்கின்றது.. அதேபோல் ஈழத்தினுடைய தென்பகுதி கடற்கரைச்சூழலில் தற்போது அபாய சூழ்நிலையென அடையாளப்படுத்தப்பட்ட கடல் ஆமை இனங்களும் சுற்றுலாத்துறையின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது. இவற்றினுடைய இருப்பையும் நிலவுகையையும் உறுதிப்படுத்த வேண்டியது அப்பிரதேச மக்களினுடையதும் உரிய ஸ்தாபனங்களினதும் கடமையாகும். காரணம் அவற்றினுடைய முட்டைகள் களவாடப்பட்டு கறுப்புசந்தையில் விற்பனையாகின்றமை குறிப்பிடத்தக்க சம்பவங்களாக பதிவாகியுள்ளன. இவ்வாறாக கடற்கரை சூழல், அங்குள்ள உணிரினங்கள், கனியவளபபாறைகள், சதுப்புநிலத்தாவரங்கள், ஈரநிலக்காடுகள் என பல்வேறுபட்ட சூழல்தொகுதிகளை இணைத்து சுற்றுலாத்தளங்களை நாடாவிய ரீதியில்அமைக்கக்கூடிய ஏதுகை காணப்படுகின்றது.

ஆராய்வோம்.........

த.விதுர்க்ஷன்,
மாணவன்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

மாற்றங்களை ஏற்றுக்கொள்!

முகலன் தான் கேட்ட கேள்வியில் ஏதேனும் தவறு இருக்கிறதா என்பதைப்போல பரிதாபமாக மகாநாமரைப் பார்த்தான். அவன் பார்வையின் அர்த்தத்தை விளங்கிக்கொண்ட மகாநாமர்,

"மகனே... ஒரு மரக்கலத்தில் பறக்கின்ற கொடி எமது அதிகாரத்தையோ அந்தஸ்தையோ வெளிக்காட்டுவதை தாண்டி எமக்கான பாதுகாப்பை வழங்கும் வகையில் இருப்பது தான் முக்கியம்..."

என்று கூறிமுடிப்பதற்குள் முகலன் எதோ கேட்பதற்கு எத்தனித்தான்... அவன் தோள்களைப்பற்றி

"எமது நாட்டின் கொடி எமக்குப் பாதுகாப்பை வழங்காதா? என்று தானே கேட்க முற்படுகிறாய்... இந்தக் கடலைக்கடந்து தமிழகம் செல்லும் எமக்கு எங்கள் நாட்டுக் கொடியைக் காட்டிலும் பாதுகாப்பு தர வல்லது இந்தக்கொடி தான்... பரந்த தமிழகம் முழுவதும் இப்போது களப்பிரர்



ஜீவா ஜீவனின்

# சிங்கிரித்தலைவன்

ஆட்சி 21

கைகளில்... எம்நாட்டை கைக்கொண்டு ஆண்ட பாண்டியர் தேசமும் இப்போது அவர்கள் வசம் தான்... என் ஒற்றர்கள் அனுப்பிய செய்திப்படி பௌத்தம் சொல்லும் நெறிகளுக்கு அவர்கள் என்றும் தலைசாய்த்தவர்கள்... எந்த தேசத்தில் இருந்து வந்தாலும் பௌத்த துறவிகளுக்கு அவர்கள் பாதுகாப்பும், புகலிடமும் தந்து காக்கும் பண்பைக் கொண்டவர்கள்...

இந்தக் கொடி அபய முத்திரை கையில் கொண்டு எமக்கு அருளும் போதி மாதவன் பெயரால் எமக்கு அபயமளிக்கும் கொடி... காவி தரித்தவர்களை காக்கும் கொடி .."

என்றவர் தள்ளி நின்ற வீரன் ஒருவனுக்கு எதோ சைகை செய்தார்...

"ஐயனே... தங்கள் ஆழ்ந்த அறிவினால், ஒரு அரசையே அமைக்கவல்லவர் என்பதை இலங்கை பூமி அறியும்... உங்கள் தயவால், என் தந்தையின் மரணத்திற்கு காரணமானவர்களுக்கு தகுந்த தண்டனை கொடுப்பேன்..."

முகலனின் முகத்தில் கோபம் கொப்பளித்தது...

"மகனே... பொறுமைகொள் காலம் எல்லாவற்றுக்கும் ஒரு தருணத்தை எமக்காக தரும்... அதற்காகக் காத்திரு...
இடையிடையே வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்..."

மரக்கலத்தின் கீழே சென்று ஒரு ஓலைப்பெட்டியுடன் வந்த வீரன் மகாநாமரிடத்தில் பணிந்து நின்றான்... மகாநாமர் அந்தப் பெட்டியைத் திறந்தார்...அதற்குள்ளே காவி ஆடை ஒன்று மடித்துவைக்கப்பட்டிருந்தது... முகலனும் மற்றவர்களும் மகாநாமரின் மாற்றத்தையும் உணர்ந்து கொண்டவர்களாய் அவரை வணங்கி நின்றனர்...

இந்த மாற்றங்கள் மரக்கலத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த போது... தாம் பிரிந்து வரும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமான ஒரு மாற்றத்துக்கு

அத்திபாரமிடப்படுவதை அவர்கள் அறிந்திருக்க முடியாது... அந்த மாற்றத்தின் நாயகனாக காசியப்பன் அனுராதபுரத்து அரண்மனையின் மாடத்தில் சாளரத்தின் ஊடாக வெளியே பார்த்தபடி அமர்ந்திருந்தான்... அவன் உடல் தான் அங்கு வைக்கப்பட்டிருந்ததே தவிர உள்ளம் முழுதும் எங்கோ ஓரிடத்தில் நிலைகொண்டிருந்தது... அவன் நினைத்தது போல மணிமுடியும் அரியாசனமும் கிடைத்துவிட்ட போதும் இன்னும் ஏதோஒன்றை அடையாதவன் போல அவன் விறைத்துப்போய் அமர்ந்திருந்தான்... அவன் அமைதியை வெகுநேரமாய் கலைக்க விரும்பாத மிகாரன் மாடத்தின் வாசலிலேயே காத்து நின்றான்... நீண்ட நேரமாகியதால் பொறுமையிழந்த அவன்...

“மைத்துணருக்கு ஏதும் ஆழ்ந்த யோசனையோ...?”

என்றபடி உள்ளே நுழைந்தான்...

“வர வேண்டும்... மீகாரா... எப்போது வந்தீர்... சென்ற விடயம்..?”

என்று ஆவல் ததும்ப கேட்ட காசியப்பனின் விழிகள் வாசலைத் துழாவியது...

“நான் வந்து நாழிகையாகிறது... உம்மை இடைஞ்சல் செய்ய வேண்டாமே என்று வெளியே நின்றேன்... போன விடையம் பாதி வெற்றி தான்... உன்னிச்ச உடன் வருவதாகவே இருந்தான்.. எனினும் அவன் தாயாருக்கு திடீரென ஏற்பட்ட உடல் நலக்குறைவால், இரு நாட்கள் தாமதமாகவே...”

“இல்லை மீகாரா... இனியும் தாமதிக்க முடியாது... நானே புறப்படுகின்றேன்... வீரர்களை தயார் நிலையில் இருக்க சொல்..”

எழுந்து தன்னை தயார்ப்படுத்திக்கொண்ட காசியப்பனை மீகாரன் அன்போடு தழுவி

“மைத்துணா... பொறுமை கொள்... பொறுமை கொள்.. காலம் எல்லாவற்றுக்கும் ஒரு தருணத்தை எமக்காக தரும்... அதற்காகக் காத்திரு... இடையிடையே வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்...”

என்றான்... காசியப்பன் அவனை அணைத்தபடியே சிரித்தான்...


“மைத்துனரே மாற்றங்கள் யாவும் என்னிடமிருந்தே தோன்றட்டும்... உங்கள் துணையுள்ளவரை என்னால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் வெற்றிபெறும்!”

“என் வாயை அடைக்க தெரிந்தவன் நீ... உன் பாராட்டுதலுக்காக ஒரு பரிசு வைத்திருக்கிறேன் பார்...”

என்றவன் தன் இடையில் செருகியிருந்த துணிச்சுருள் ஒன்றை எடுத்து காசியப்பனிடம் கொடுத்தான்... அதை ஆவலோடு வாங்கி விரித்த காசியப்பனின் முகத்தில் புதிதாய் ஒரு பூ மலர்ந்ததை புன்னகையோடு வரவேற்றான் மீகாரன்... அந்த துணியில் காசியப்பன் முன்னரே கண்ட ஓவியம்...அந்த ஓவியத்தின் மூலையிலே மிகச் சிறிதாக, “பாதி நீங்கள் மீதி லீலா” என பொறிக்கப்பட்டிருந்தது!

லீலாதேவியின் சௌந்தரியம் அவன் முன்னே நிழலாடியது...

*கலை காண்போம்...*



# ஈரநிலங்களின் முக்கியத்துவம்

அதிரன்

சூழலியல், பொருளாதார சமூக ரீதியில் மனிதனுக்கு மறைமுகமாக பல்வேறு பங்களிப்புக்களை வழங்குகின்றன.

## வெள்ள அபாய நிலையினைக் கட்டுப்படுத்துதல்

அதிக நீர்வீழ்ச்சியின் போது பெறப்படும் நீரை உள்வாங்கி வெள்ளம் வராமல் தடுக்கிறது. மாரி காலங்களில் தொடர்ச்சியாக மழை பொழிகின்ற போது ஏற்படுகின்ற வெள்ள அபாய நிலையினைக் கட்டுப்படுத்துகின்ற ஓர் இடமாக ஈரநிலங்கள் காணப்படுகின்றன. ஆற்றோரங்களை அண்டிக் காணப்படும் வில்லு நிலங்கள் ஆறு வெள்ளப்பெருக்கு நிலைக்குட்படும் போது வெள்ள அபாயநிலையினைக் கட்டுப்படுத்துகின்றன.

## விவசாய நடவடிக்கைகளுக்கு சாதகமாகக் காணப்படுதல்

வண்டல் கலந்த நீரானது ஈரநிலங்களினூடாக செல்கின்ற போது கடற்கரை சதுப்புநிலத்தாவரங்கள் போன்றவற்றால் தடுக்கப்பட்டு வண்டல்களை படிய வைக்கின்றன. வயல் மற்றும் ஏனைய விவசாய நிலங்களினூடாக உணவு உற்பத்தி



செய்வதற்கு ஈரநிலங்கள் துணைபுரிகின்றன. பொதுவாக ஈரநிலங்கள் செறிவான வளமுள்ள பகுதிகளாகக் காணப்படுவதனால் விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்ற இடங்களாகக் காணப்படுகின்றன.
வீட்டுத்தோட்டங்களின் மகரந்த சேர்க்கைக்கு துணை புரிகின்ற பகுதியாகவும் ஈரநிலங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

## வடிகாலமைப்பு அல்லது வீட்டுப்பாவனைக்கான கிணறுகளுக்கு நன்னீரை வழங்கல்.

நீரை தூய்மையாக்குதல் இந்த நிலங்களின் முக்கிய பயனாகும். மேற்பரப்பு நீர்களில் கரைந்துவரும் இரசாயனங்களை நீக்கும் ஒரு வடிகட்டியாக இது செயல்பட்டு தரைக்கீழ் நீரின் தரத்தை பாதுகாக்கிறது.

## அழகிய மற்றும் மருத்துவ தாவரங்களை வளர்த்தல்

ஈரநிலங்கள் பெறுமதிவாய்ந்த மருத்துவத் தாவரங்களை அதிகமாகக் கொண்டிருக்கும் உயிரினச் சூழற்தொகுதியாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக ஈரநிலங்கள் மருத்துவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

## உள்ளக காற்றின் வெப்பநிலையை கட்டுப்படுத்துதல்

உலக வெப்பநிலை சீர்ப்பாட்டுக்கான காபனை சேமித்தல் மற்றும் பிரித்தல் பணியை செவ்வனே செய்தல். ஒரு பிரதேசத்தின் இடம்சார் காலநிலை (Topo- Climate) நுண் காலநிலை (Micro Climate) ஆகியவற்றின் தன்மைகளை பேணுவதிலும் இவை முக்கியமான பங்களிப்பினையே செய்கின்றன. இதனால் மிதமான வெப்பநிலை நிலவுவதற்கும் மனித சௌகரிய நிலையை ஏற்படுத்தவும் இவை காரணமாகின்றன.

### பொழுதுபோக்கு மற்றும் கல்வி வாய்ப்புகளை வழங்குதல்

சம்பிரதாயபூர்வமான நம்பிக்கைகள், ஆன்மீக மற்றும் கலாசார விடயங்களுக்கு பங்களிப்பு வழங்கல் என்பற்றுடன் கூடிய உல்லாசத்துறைசார் நன்மைகள் ஈரநிலங்களின் மூலம் கிடைக்கின்றன.

### புயற்காலங்களில் ஏற்படும் கரையோர மண் அரிப்பை தடுக்கின்றன

கடற்கரையோரங்களை அண்டிக் காணப்படுகின்ற ஈரநிலங்கள் கண்டல் தாவரச் சூழற்தொகுதியினை கொண்டு காணப்படுகின்றன. இதன் காரணமாக கடலலைகளின் மூலம் கடற்கரைகள் அரிக்கப்படுவதனைத் தடுக்கின்றன.

### பூச்சிகளை கட்டுப்படுத்தல்

ஈரநிலச் சூழற்தொகுதியில் காணப்படும் மருத்துவத் தாவரங்கள் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் துணைபுரிகின்றன.

### நீர்ப்பாசனம் மற்றும் நீர்மின்சார உற்பத்தி

விவசாய உற்பத்திகளையும் நீர்ப்பாசன



தேவைகளையும், குடிநீரையும் பெற்றுக் கொள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் என்ற பெயரிலும் நீர் மின்சாரத்தை பெறுவதிலும் பங்களிப்பினை வழங்குகின்றன.

### கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களாக விளங்குகின்றது.

ஆறுகள் மற்றும் வில்லு நிலங்களை அண்டிக் காணப்படும் புற்தரைகள் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகளாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக ஈரநிலங்கள் கால்நடைசார் உற்பத்தி நடவக்கைகளில் முக்கியத்துவம் வாய்நத இடங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

### மீனினங்களின் இனவிருத்தி

மீனினங்களின் இனவிருத்திக்கு ஏற்ற இடங்களாக உள்ளதோடு மீன்பிடி, உப்பு உற்பத்தி போன்றவைற்றில் கடல்சார் மற்றும் களப்பு, கடல்நீரேரிகளாவும் ஈரநிலங்கள் விளங்குகின்றன.

### அழிவுக்குள் ஈரநிலம்

மானிட மற்றும் இயற்கைக் காரணிகளின் தாக்கங்களினால் ஈரநிலங்கள் அழிவடையும் போது பல்வேறு பிரச்சனைகள் தோற்றம் பெறுகின்றன.

### வெள்ளப்பெருக்கு நீரின் தாக்கம்

மனிதனின் பொறுப்பற்ற நடவடிக்கைகளின் காரணமாக ஈரநிலங்கள் காணாமல் போகின்ற போது மழைக் காலங்களில் வெள்ள நீர் அதிகமாகி வெள்ள அபாய நிலை ஏற்பட வாய்ப்பாகின்றது. ஆற்றங்களைகளை அண்டி அண்மைக்காலங்களாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு இவ் அபாய நிலையினை மேலும் அதிகரிக்கின்றது.

## உயிர்ப்பல்வகைமை பாதிப்படைதல்



தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்ற மானிட செயற்பாடுகளினால் ஈரநிலச் சூழற்தொகுதியின் உயிர்ப்பல்வகைமை பாதிப்படைகின்றது. நதிக்கரைகள், கடலோரங்கள் மற்றும் வனாந்தரங்களை அண்டிக் காணப்படும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவுகள் மற்றும் காடழிப்பு நடவடிக்கைகளினால் ஈரநிலச் சூழற்தொகுதியின் சமனிலை பாதிப்படைகின்றது.
ஈரநிலச் சூழற்தொகுதிகள் காணப்படும் இடங்களில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வு, மணல் நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலமும் உயிர்ப்பல்வகைமை பாதிக்கப்பட்டு சூழலின் சமனிலைத் தன்மையில் குழப்பம் ஏற்படுகின்றது.

## கண்டல்தாவரங்கள் அழிவடைதல்

கடற்கரைகளில் காணப்படும் கண்டல் தாவரங்கள் பல்வேறு தேவைகளுக்காக வருடாந்தம் அழிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. கடலோர அரிப்பினைக் கட்டுப்படுத்தும் பாரிய பணியினை நிறைவேற்றுகின்ற கண்டல் தாவரங்கள் வலைகள் மற்றும் இறால் கூடுகளுக்கான தடிகளுக்காக கண்டல் தாவரங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்றன.

## அளவுக்கு அதிகமான மீன்பிடி நடவடிக்கை

அளவுக்கு அதிகமான மீன் பிடி நடவடிக்கை ஈரநிலச் சூழற்தொகுதியில் பாரிய தாக்கம் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. மீனவர்கள் தரமற்ற வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதும் வெடிமருந்துகளைப பாவிப்பதும் அதிகரித்து வருகின்றது.

## முருகைக்கல் அழிவடைதல்

சட்டவிரோத மீன்பிடி மற்றும் படகு செலுத்தல் நடவடிக்கைகளினால் முருகைக்கல் பாதிப்படைகின்றது. மீன்பிடி நடவடிக்கைகளின் மூலம் முருகைக்கல் பல்லடியங்கள் பாதிப்படைகின்றன.

## மண் அமிலமாதல் மற்றும் மண் உவராதல்

தொடர்ச்சியான பயிர் செய் நடவடிக்கைகளாலும் இரசாயனங்களாலும் மண் அமிலமாதல் அதிகரித்து வருகின்றது. அதிகளவில் செயற்கைப் பசளைகள் மற்றும் செறிவூட்டல் இரசாயனங்கள் மண் உவராதலில் செல்வாக்குச் செலுத்துகின்றன.







## ஈரநிலங்களின் மாசடைவுகள்

தொடர்ச்சியான நகராக்க செயற்பாடுகள் மற்றும் கைத்தொழிற்சாலைகள் மூலம் வெளியேறறப்படும் கழிவுகள் ஈரநிலங்களை மாசடையச் செய்கின்றன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | |
| | | 6 | | | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | 11 |
| 12 | | | 13 | | | 14 | |
| 15 | | | 16 | | | | |
| | | 17 | | | 18 | | 19 |
| 20 | 21 | | | | | | |
| 22 | | | | 23 | | | |




## இடமிருந்து வலம்

1- பாமர விளையாட்டுப் பொருள் ஒன்று
5- இனிய சொற்களை இதனை ஒத்தன என்றார் வள்ளுவர்.
6- கணிதச்செய்கை ஒன்று
8- தட்டையான இரு பரிமாண பரப்பை இப்படிக் கூறுவர்.(குழம்பி)
10- நாளின் ஒரு பொழுது.
12- தாமரை மலரை இப்படியும் சொல்லலாம். (குழம்பி)
14- தறியில் நெய்யப்படுவது.
15- நான் என்பதன் பன்மை வடிவம் (திரும்பி)
16- பிரியமான தோழி (திரும்பி)
17- குறைந்து கொண்டு வரும் ஒரு தொடர்பாடல் முறை
20- இறை அருளால் கவி பொழிபவர் (திரு-ம்பி)
22- பண்டிதன் என்பதன் பெண்பால்
23- வீடுகளின் காவற்பொருள்

## மேலிருந்து கீழ்

1- போட்டி என்றும் சொல்லலாம்
2- செந்நிறமான இரத்தினக்கல்
3- இராமனின் வம்சம்
4- இணக்கமான தொடர்பு என்று பொருள்படும். (குழம்பி)
5- சிற்பங்களின் தொடக்க மூலப்பொருள்.
7- உடலின் முக்கிய உறுப்பு
9- ஓர் உலோகம் (தலைகீழ்)
11- ஆலயங்களில் ஒலிப்பது
13- பல்கலைக்கழகப் பராம்பரியம் ஒன்று
14- துளியிலும் சிறியது
17- இந்த மிருகத்தை விட இதன் பொம்மை எல்லோருக்கும் பிடிக்கும்.
18- போர் நடைபெறும் இடம்(தலைகீழ்)
19- இலாபகரமான கொள்வனவு
20- புனிதத்தை குறிக்கும் ஒரு சொல்லின் பாதி வடிவம் (தலைகீழ்)
21- கற்றவர்களே இது உடையவர்கள் என்பது வள்ளுவர் கூற்றாகும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 2 ர் | 3 ண | 4 ன் | | | | 5 ஆ |
| 6 ண் | தா | ம் | ட | 7 வ | | 8 பெ | ண் |
| ண | | 9 ப | க | ல | 10 வ | ன் | |
| 11 கி | 12 ரி | | | 13 ம் | த | சி | உ |
| | 14 ம | 15 து | | 16 பு | ன | ல் | |
| 17 ச | கி | த் | 18 ர | ரி | ம் | | 19 ப |
| 20 ல் | ந் | ப | த | | | 21 சு | து |
| லி | | 22 ஆ | ம் | ப | ல் | | மை |

## குறுக்கெழுத்துப்போட்டி - 17

சரியான விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

www.thumi.org

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

T.K. மகி

15

# வழுக்கியாறு

## சூழற்தொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும்

## வருடாந்த ஆண்டுப் பயிர்ச் செய்கை

(Cultivation of annual crops)

சிறு தானியப்பயிர்களான குரக்கன் **Eleusine coracana (finger millet),** சாமை **Setaria italica (foxtail millet)** ஆகியவை பொதுவாக நெல் அறுவடையின் பின்னர் கோடைகாலப் பயிராக தாழ் நிலப்பகுதிகளில் செய்கை பண்ணப்படுகின்றது. அத்துடன் எள்ளு **Sesamum indicum (gingelly),** உழுந்து **Vigna mungo (black gram),** பயறு **Vigna radiata (green gram)** என்பனவும் கோடைகாலப் பயிர்களாக செய்கை பண்ணப்படுகின்றது. பொதுவாக சிறுதானியங்கள் மக்களின் உணவுத் தேவைக்கும் கால்நடைகளின் உணவுக்காகவும் பயன்படுகின்றது. மேலதிக உற்பத்தியானது உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகள் வருமானத்தை பெற்றுக் கொள்கின்றனர்.

மேட்டு நில விவசாயிகள் பொதுவாக வெங்காயம் **Allium cepa (onion),** வெண்டி **Abelmoschus esculentus (okra),** மிளகாய் **Capsicum annuum (chili pepper),** கத்தரி **Solanum melongena (brinjal or eggplant),** பூசனி **Cucurbita maxima (pumpkin),** போன்றவற்றை மாரி, கோடை காலங்களில் போகப்பயிர்களாக செய்கை பண்ணுகின்றனர் ஆனால் தாழ்நில விவசாயிகள் மாரிகாலங்களில் வெள்ளம் காரணமாக கோடைகாலங்களில் மட்டுமே மரக்கறிச் செய்கையில் பெருமளவில் ஈடுபடுகின்றனர். அனைத்து பயிர்செய் நிலங்களும் கோடைகாலங்களில் கோவா **Brassica oleracea var. capitata (cabbage),** பீற்றூட் **Beta vulgaris (beet),** தக்காளி **Solanum lycopersicum (tomato),** வெங்காயம் **Allium cepa (onion),** வெண்டி **Abelmoschus esculentus (okra),** மிளகாய் **Capsicum annuum (chili pepper),** கத்தரி **Solanum melongena (brinjal or eggplant),** பூசனி **Cucurbita maxima (pumpkin),** புடோல் **Trichosanthes cucumerina (snack gourd),** பாகல் **Momordica charantia (bitter gourd),** பயிற்றை **Vigna unguiculata ssp. sesquipedalis (long been),** மரவள்ளி **Manihot esculenta (cassava),** கீரைவகை **Spinacia oleracea (spinach),** உருளைக்கிழங்கு **Solanum tuberosum (potato),** கரட் **Daucus carota**





subsp. sativus (carrot), மற்றும் புகையிலை Nicotiana tabacum (tobacco) போன்ற பயிர்களால் நிறைந்து காணப்படும்.

மரக்கறிப் பயிர்ச்செய்கையானது மூல வருவாய் மார்க்கமாக உள்ளது. ஏனெனில் வழுக்கியாற்று வடிநில விவசாயிகளின் நிலவுடமை பரப்பளவானது குறைவு என்பதனால் அவர்களின் நெற்செய்கை சுய தேவையின் பொருட்டே பெரும்பாலும் செய்கை பண்ணப்படுவதுடன் சுயதேவையையே பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளது.

விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்காக உள்ளூர் சந்தைகளான மருதனார்மடம் மற்றும் சுண்ணாகம் பொதுச்சந்தைகளை நாடுவதுடன் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையம் முதலிய வெளியூர் சந்தைகளுடனும் தொடர்புகளை பேணுகின்றனர்.
மிதமிஞ்சிய மரக்கறி உற்பத்தியின் போதும் பூச்சிப்பீடை தாக்கத்திற்கு உள்ளான மரக்கறிகளும் கால்நடைகளுக்கு உணவாக பயன்படுகின்றது. விவசாயிகள் சணல் Crotalaria juncea (sunhemp) எனும் பயிரை விவசாய



நிலங்களில் விதைத்து பசளைக்காக அதனை உழுது மண்ணுடன் கலந்து விடுகின்றனர் இது பயிர்நிலங்களுக்கு சேதனப்பசளையாக பயன்படுகின்றது.

சணல் Crotalaria juncea (sunhemp), உழுந்து Vigna mungo (black gram), பயறு Vigna radiata (green gram) என்பன அவரைக் குடும்பப் பயிர்களாகும் இவை நிலத்தில் நைதரசனை பதிக்கும் ஆற்றல் பெற்றுள்ளமையினால் இவை விவசாயிகளால் நிலங்களை வளமாக்கும் ஊடகங்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



தாழ்நிலங்களுக்கும் உயர்நிலங்களுக்கும் இடைப்பட்ட பகுதி வருடார்ந்த வெள்ளப்பெருக்கிற்கு அதிகம் உள்ளாவதுடன் அப்பகுதி பனை மற்றும் தென்னை மரங்களை அதிகளவில் கொண்டு காணப்படுகின்றது இம்மரங்கள் காற்றுத் தடையாகவும் மண்ணரிப்பை தடுக்கும் மூலங்களாகவும் அமைவதால் பயிர் செய்நிலங்கள் ஓரளவுக்கு இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கப்படுகின்றது.

(ஆறு ஓடும்)

புயல் பெ. சிறீகந்தநேசன்,
மாங்குளம்



# பெண்களும் உளவியல் முரண்பாடுகளும்

அறிமுகம்:-

பெண் என்னும் பெயர் விலங்குகளில் அண்டத்தையும் தாவரங்களில் சூலங்களையும் கொண்டிருக்கும் இனத்தை குறிக்கும். மனிதரில் பெண்கள் ஒரு குலம். உளவியல் என்ற பதம் மனித மனம் செயற்படுவதைக் குறித்தும் மனத்தின் வெளிப்பாடுகளுக்கான குணம், நடத்தை குறித்து ஆராயும் அறிவியல் துறை ஆகும். முரண்பாடு என்பது ஒன்று அல்லது ஒருவர், குறிப்பிடப்படும் ஒன்றின் அல்லது ஒருவரின் நிலைக்கு எதிராக இருத்தல் மாறுபடுதல் ஆகும். அவ் வகையில் இக் கட்டுரையானது வடக்கு மாகாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தங்களையும் உளவியல் முரண்பாடுகளையும், பிரச்சினைகளும் சிரமங்களும் மிகுந்த நிலையில் ஏற்படும் உளவியல் நெருக்கடிகளையும் ஆராயும்.



தொடருரை:-

இலங்கை சமூகத்தில் ஆண்களைவிட பெண்களே சனத்தொகையில் கூடிய அளவு உள்ளனர். ஆண்களை விட, பெண்கள் வருமான உழைப்பாளர் மற்றும் குடும்பப் பராமரிப்பாளர் என்ற முறையில் இவர்கள் இரட்டைச் சுமையைக் கொண்டுள்ளனர். பல குடும்பங்களில் பெண்களே பிரதான வருமான ஈட்டாளர்களாக காணப்படுவதோடு, அதற்கு மேலாக சமைத்தல், கணவனைப் பராமரித்தல், விறகு சேகரித்தல், எவ்வித வேலையும் செய்யாத கணவனை பாதுகாத்தல், நீர் சேகரித்தல், வீட்டுப்பராமரிப்பு, குழந்தைகளைப் பராமரித்தல், வயது சென்றோர்களைப் பராமரித்தல், துணி துவைத்தல், சகோதரர்களைப் பராமரித்தல் முதலிய செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக அவர்கள் தொழில் நாட்களில் எவ்வித ஓய்வு நேரத்தையும் அநுபவிப்பதில்லை. அதிகாலை முதல் நள்ளிரவு வரை அதிகமான வேலைப்பலுவிற்குட்படுகின்றனர். இதனால், நித்திரையின்மையால் இவர்களது உடல்நலனும் பாதிப்படைகின்றது. வேலைத்தளங்களிலும் பாதைகளிலும் துன்பங்களுக்கு உட்படல் என இன்னோரன்ன துன்பங்களைப் பல்வேறு விடயங்களிலும் நாளாந்தம் அநுபவிக்கின்றனர்.

குடும்பத்தில் ஆண்களே தொடர்ந்தும் தீர்மானங்களை மேற்கொள் பவர்களாகக் காணப்படுகின்றனர். பிள்ளைகளின் கல்வி, தொழில், வீட்டதிகாரம், வீட்டுத்துறை கொள்வனவு, குடும்பநிலை உறவு பேணல், வீட்டுப்பொருளாதாரத்தைப் பேணல் முதலிய விடயங்களை ஆண்களே நடைமுறைப்படுத்துகின்றனர். சமுதாயச் சடங்குகள், கலாசார நிகழ்வுகள், தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் அரசியல் முதலிய துறைகளில் பெண்களின் ஈடுபாடு மிக மிக குறைவாகவே காணப்படுகின்றது.



இலங்கையில் இவ்வாறாக பொதுவாக பெண்கள் எதிர் கொள்ளும் உடல் - உள முரண்பாடுகள் காணப்பட்டாலும் வடக்கு மாகாணத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் உள நெருக்கடிகள் அதிகமே. உள் நாட்டு யுத்தத்தினால், இலங்கை முழுவது பாரிய பின்னடை கண்டதுடன், உயிர்ச் சேதமும் மற்றும் பொருளாதார சேதமும் ஏற்பட்டன. யுத்தம் இறுதியாக நடந்து முடிந்த வடக்கு மாகாணத்தில் பெண்கள் உளவியல் ரீதியாக பாரிய முரண்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இவ் மாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் 36334 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 8435 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5961 பேரும் வவுனியா மாவட்டத்தில் 6712 பேரும் மன்னார் மாவட்டத்தில் 5903 பேரும் ஆக மொத்தத் தொகையாக 63345 பெண்களைத் குடும்பத்லைவர்களாக கொண்ட குடும்பங்கள் உள்ளன.

வடக்கு மாகாணத்தில் இவ்வாறு பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் பொருளாதாரச் சுமையைச் சுமக்க முடியாது அதிக அளவான பெண்கள் நுண்கடன்களைப் பெற்று அதனை மீளச் செலுத்த முடியாது வாழ்க்கையில் பல சவால்களை எதிர்கொண்டு மன அழுத்தத்திற்கு உள்ளாகி, சமூகப் பிறழ்வு - தற்கொலை - என்று தவறான பாதைக்குச் செல்கின்றனர். இதனை 2018 ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்த ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் ஒருவர் கடுமையாக எச்சரித்திருந்தார். கடனை மீள செலுத்த முடியாது தானும் நஞ்சு அருந்தி



பச்சை பாலகர்களுக்கு நஞ்சை பருக்கி இறக்கின்றனர். இன்று வடக்கு மாகாணத்தில் பெண்களோடு சேர்ந்து, சிறுவர்களும் பாரிய உள நெருக்கடிகளுக்கு உள்ளாகி எமது இன விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனர். சான்றாக, 2021 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் தரம் ஒன்றில் புதிதாக இணைந்த மாணவர் தொகை வீழ்ச்சியைக் குறிப்பிடலாம். பத்து பாடசாலைகளில் எவரும் விண்ணப்பிக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு 16820 மாணவர்களும் 2021 ஆம் ஆண்டு 15703 மாணவர்களும் தரம் ஒன்றில் இணைந்துள்ளமை மாணவர்கள் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இதற்கு எண்பது வீதத்திற்கும் அதிகமான அரச பணியில் இருக்கும் பெண்கள் பொருளாதாரச் சுமைக்கும் வேலை பளுவிற்கும் உள்ளாகி குழந்தைகளை ஒன்றுக்கு மேல் பெற்றுக்கொள்ள வெறுப்படைகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் யுத்தம், இயற்கையாக, கணவனால் கைவிடப்பட்டு, கணவனின் ஊனம், கணவன் காணாமல் போயிருத்தல் முதலிய பல்வேறு காரணிகளால், கணவனை இழந்த பெண்களை அரச அதிகாரிகள் முதல் சாதார குடிமகன் வரை பாலியல் தொல்லைகளைப் புரிவதால், அவர்கள் உளச் சவால்களுக்கு உள்ளாகின்றனர். விதவைகளைச் சமூக நிகழ்வுகளிலிருந்து தள்ளி வைப்பதால், தங்களால் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என தாழ்வுச்சிக்கல் மனப்பாங்கு ஏற்பட்டு பரிதவிக்கின்றனர்.

கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து, வாழ்விடம், போ‘ணை மட்டம் முதலியவற்றால், பாதிக்கப்பட்டு குறையூட்டத்தை அடைந்து, உழைப்பிற்கேற்ற வேதனம் இல்லாமலும் அதனால், போதியளவு நித்திரை இன்மையால், வாழ்க்கையில் வெறுப்பு, ஞாபக மறதி, காரணமில்லாமல் கோபப்படல் முதலிய உள முரண்பாடுகளுக்கு உள்ளாகின்றனர். தமிழ்ப் பெண்கள் அன்று தொடங்கி இன்று வரை சீதனக்கொடுமைக்கு உள்ளாகி வருவதை

நாம் கண்கூடாகப் பார்க்கலாம். வடக்கு மாகாணத்தில் கல்வி கற்ற சமூகம் முதல் பாமரர் வரை ஆண் சமூகத்தைச் சேர்ந்த பலரும் சீதனம் கேட்டுப் பெண்களுக்கு உளச் சிக்கல்களைக் கொடுத்துவருகின்றனர். வடக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களை விட யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகம் நடைபெறுகின்றமையைக் காணலாம். இன்றைய நிலையில் நீதி மன்றங்கிளில் பல விவாகரத்து வழக்குகள் இதை பறை சாற்றும். திருமணமாகிய பின்பும் கணவன்மார் பலர் சீதனம் கேட்டு மனைவிமாரைத் துன்புறுத்தி அவர்களுக்கு உள ரீதியான பாதிபபை ஏற்படுத்தி, தற்கொலைகளுக்கும் வழி சமைத்துள்ளனர். இவ்வாறன கொடுமைகளைக் கேள்வியுற்ற பெண்கள் பலர் முதிர் கன்னிகளாக உறவினர்களுடனும் தனிமையிலும் தாம்பத்திய வாழ்வை வெறுத்து வாழ்கின்றர். எமது சனத் தொகை சரிவுக்கு இதுவும் ஒரு காரணம்.

பெண்கள் குடும்பங்களுக்குத் தலைமை தாங்குவதற்கான பிரதான காரணங்களாக பினவருவனவற்றைக் குறிப்பிடலாம்:- போர், கணவன் நோய்வாய்ப்பட்டிருத்தல், கணவனின் அங்கவீனம், கணவனைப் பிரிந்திருத்தல், கணவன் தடுப்பில் இருத்தல், கணவன் வெளிநாட்டில் இருத்தல், கணவனின் மரணம், கணவனின் போதைவஸ்து பாவனை, திருமணம் முடிக்காமை, குடும்ப



வருமானத்தில் கணவனின் பங்களிப்பு இன்மை, பிள்ளைகளைத் திருப்திப்படுத்துவதற்காகவும் சமூக அந்தஸ்துக்காகவும் போலியாக கணவன் மனைவியாக வாழ்தல். இவ்வாறான பெண்கள் வடக்கு மாகாணத்தில் சமூகத்திலிருந்து அந்நியமயமாதல் வாழ்வை மேற்கொள்வதால், எதிர் கால வாழ்க்கை பற்றிய நம்பிக்கையின்மை மன நிலையுடன் வெண்டா வெறுப்பாக வாழ்க்கையைத் தொடர்கின்றனர். இவர்களுக்கு உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை மேற் கொண்டு, சமூக நீரோட்டத்துடன் இணைத்து, மறு மணத்தை வலியுறுத்துவதன் மூலம் அந்நிய மயமாதலைக் குறைக்க முடியும்.

'ஆண்பையன் அழக்கூடாது,' 'பெண்பிள்ளை மரமேறக்கூடாது' முதலிய விதிமுறைகள் மக்கள் மத்தியில் பதிய வைக்கப்படுகின்றன. இவை அனைவருக்கும் பொதுவான உண்மையாகும். ஆனால், இத்தகைய சிந்தனைகள் காலத்திற்குக் காலம் வேறுபட்டு வந்துள்ளன் ஒரே காலத்தில் வர்க்க, சாதி, இன, மத வேறுபாட்டிற்கு ஏற்ப வெவ்வேறு மதிப்பீடுகள் காலாகாலம் இருந்து வந்துள்ளன. ஆனால், ஆண்மை - பெண்மை என உருவாக்கப்பட்டுள்ள கருத்துக்கள், அவற்றுக்கு வழங்கப்படும் மதிப்பீடுகள் தொடர்ந்து வருகின்றன. அவற்றைத் தீர்மானிக்கும் பல்வேறு கருத்தியலில் மதம், அறிவியல், அரசியல், கல்வி ஆகிய துறைகள் முக்கியமான பங்காற்றுகின்றன. என்ற கருத்திற்கு ஏற்ப வடக்கு மாகாணத்தில் வர்க்க ரீதியாகவும் சாதிய ரீதியாகவும் மத ரீதியாகவும் இன ரீதியாகவும் பெண்கள் உளவியல் ரீதியாக பாதிப்புக்கு உள்ளாவதைக் காணலாம். சான்றாக, சாதி விட்டு வேறு சாதியில் காதலித்துத் திருமணம் புரியும் பெண்களைப் பிரித்து வைப்பதையும் அவர்களை உள - உடல் ரீதியாக துன்புறுத்துவதைக் காணலாம்.

மேலும் விடயங்களை அடுத்த அதலில் பார்போம்...

# கிரிக்கெட்டில் யார் வேண்டுமானாலும் இந்தியாவுடன் போட்டியிடலாமா?

## கிரேக் சப்பல் சொல்வதென்ன

எஸ்.எஸ்.நுஜன்

இந்தியா கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலியா மண்ணில் தன் இரண்டாவது டெஸ்ட் தொடர் வெற்றியை பதிவு செய்தபின் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கிரேக் சப்பல் கூறியதாவது "இந்தியாவின் வெற்றி ஒரு ஆச்சரியம் என்று ஒருவர் நினைப்பார்! எனக்கு ஒரே ஆச்சரியம் என்னவென்றால், இந்தியாவுடன் யார் வேண்டுமானாலும் போட்டியிட முடியும் என்பது." இந்த பதிவு இவ்வாறு அவர் சொல்லியதற்கான காரணங்களை அலச இருக்கிறது.

ஆம், இந்திய வீரர்கள் அணியில் இடம் பிடிக்கும் போது எவ்வாறான சவால்களை எதிர்கொண்டுள்ளனர் என்பதேயாகும். உலகிலேயே உடல் மற்றும் உளவியல் ரீதியில் கடுமையான குர்க்கா (Gurkha) இராணுவ பயிற்சிக்கு நிகரான கிரிக்கெட் பயிற்சி வழங்கப்படுகிறது. அதுவும் விராட் கோஹ்லி தலைமை ஏற்றபின் உடல்நலமே (fitness) முக்கியமானதொரு விடயமாகி விட்டது.

இந்திய வீரர்கள் 16வயது அணியிலேயே சவாலான போட்டிகளில் ஆடுகிறார்கள். ஏனேனில் இந்தியாவில் கிரிக்கெட்டே முதன்மையான விளையாட்டு. இலங்கை பாகிஸ்தான் பங்களாதேஷ் போன்ற ஆசிய நாடுகளிலும் இது தானே நிலைமை என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் இந்தியாவின் சனத்தொகை அடர்த்தி காரணமாக கிரிக்கெட் நோக்கி செல்பவர்களின் எண்ணிக்கை மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக அதிகம். இதைத்தான் தற்போதைய அவுஸ்திரேலியா அணியின் பயிற்சியாளரும் "1.5 பில்லியன் இந்திய மக்களில் 11 அணி வீரர்கள்" என்றார். எனவே நாட்டின் திறமையான வீரர்கள் விளையாடுவதால் மாநில அணிகளில் இடம் பிடிக்கவே கடுமையான போட்டி நிலவுகிறது.

இவ்வாறு திறமையான வீரர்கள் வெளிவருவதற்கு உள்ளூர் போட்டிகளின் கட்டமைப்பு மிக முக்கியம். இந்தியாவில்



மாநில அளவில் 16 வயது பிரிவினருக்கான 3நாள் போட்டிகள் நடக்கிறது. கிரிக்கெட், கல்வி செயற்பாடுகளையே பின்னுக்கு தள்ளி முதன்மை பெறுகிறது. ஒரு 16 வயதே ஆன இளம் இந்திய வீரர் சப்பல் க்கு கூறியது இதுதான் "சேர், நான் பாடசாலை போவதில்லை. கிரிக்கெட்டில் எனக்கு ஒரு வாய்ப்பு மட்டுமே கிடைக்கும், நான் எந்த நேரத்திலும் படிக்க முடியும்."

பின் 19வயது பிரிவினருக்கே இந்திய அளவில் நான்கு அணிகளை தெரிவு செய்து நான்கு நாள் டெஸ்ட் போட்டித் தொடர் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர் என்பன இடம்பெறுகிறது. இது 19வயதிலேயே ஒரு இளம் இந்திய அணியை உருவாக்க வழிகோலுகிறது. இவர்களே இந்தியாவை இளையோர் உலகக் கோப்பையில் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். மற்றைய நாடுகளில் இளையோர் உலகக் கோப்பை தெரிவு இப்படியாக நடக்கிறது. ஏன் கிரிக்கெட்டின் முன்னாள் சாம்பியன் அவுஸ்திரேலியாவிலேயே பதினைந்து அதிஷ்ட சாலி இளையோர் தெரிவு செய்யப்படுகின்றனர். 19வயது கடந்தால் 23வயதிற்குட்பட்ட மாநில அளவிலான டெஸ்ட் போட்டித் தொடர். இதில் மூன்று முதல்தர போட்டி வீரர்களே ஒரு அணியில் இடம் பெற முடியும். எனவே புதிய வீரர்கள் வாய்ப்பை பெறுகிறார்கள்.

இதைவிட 38 அணிகளை கொண்ட முதல் தர போட்டிகள் (ராஞ்சி கோப்பை, விஜய் ஹசாரே 50 ஓவர் கோப்பை மற்றும் சையது





முஷ்டாக் அலி 20/20 கோப்பை) பின் இந்திய ஏ அணி என்று இந்திய வீரர்கள் தேசிய அணியில் இடம் பிடிக்க முதல் பெறுகிற போட்டி அனுபவத்தை வேறேந்த நாட்டிலும் பெற முடியாது. இந்தியாவிற்கு அடுத்து அதிக முதல்தர அணிகள் இருப்பது இங்கிலாந்தில் தான். அவுஸ்திரேலியா நியூசிலாந்து தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வெறுமனே 6 தொடக்கம் 8 முதல் தர அணிகள் தான்.

மற்றைய நாடுகளில் முதல்தர அணிகளே தேசிய அணிகளுக்கு (ஏ அணி உட்பட) அடுத்த நிலையாக இருக்கும் போது, இந்தியாவில் முதல் தர அணிகளிலிருந்து திறமை அடிப்படையில் தெரிவு செய்து இந்திய அளவில் மூன்று அணிகளை உருவாக்கி

அவர்களுக்கு இடையில் மீண்டும் ஒரு போட்டி த் தொடர் (Duleep Trophy, Deodhar Trophy). ராணி கோப்பை என்று வெற்றி பெற்ற முதல்தர டெஸ்ட் அணிக்கும் Rest of India அணிக்கும் இடையிலும் நடைபெறுகிறது.

***இதை விட ராகுல் டிராவிட் தலைமையில் பாசறை வேறு இருக்கிறது. இதனால்த்தான் இந்தியா பலமான அணியாக மிளிர்கிறது.***